யாழ்நகரில்
தரமான
A/L
விஞ்ஞானக் கல்விக்கு
என்றும்
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA.

# சஞ்சீவி

விலை ரூ 2/-

A/L 88
விஞ்ஞான
வகுப்புக்கள்
Iம், IIம் பிரிவுகள்
நடைபெறுகின்றன
IIIம் பிரிவு
ஆரம்பமாகின்றது
விபரங்கட்கு:
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA.

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

மலர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஞு ஆனி மீ 14 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஷவ்வா பிறை 19 (28 06-1986) SANJEAVY- REGENERATIVE TAMIL WEEKLY இதழ்: 23

## கருத்துக் கலசம்

### தமிழில் அறிவு நூல்

தமிழ் தொன்மை மொழி இனிய மொழி சங்கம் வைத்து வளர்க்கப் பட்ட மொழி. இலக்கண, இலக்கியச் சிறப்பு மிக்க மொழி.

ஆனால் —

தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்று பாடிய பாரதியோ, மெல்லத் தமிழ் இனிச் சாகும் என்று அஞ்சியதும் உண்டு.

அவன் மனம் வேதம் பெறுதற்கு, அன்னை தமிழுக்கு ஆபத்து வருமோ என்று அஞ்சியதற்கும் ஒரு தகுந்த காரணம் இருந்தது.

புத்தம் புதிய கலைகள் - பஞ்ச பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;
மெத்த வளருது மேற்கே - அந்த மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.

அதனால்தான் தமிழ் சாகுமோ என்று பாரதியார் அஞ்சினார்.

ஆனால் அந்தப் பெரும் பழி தீர்ந்து புகழ் ஏறும் புன்மிசை தமிழ் வாழ்கிறது. பாரதி விரும்பியதும் அதுவே.

தாய் மொழியில் கல்வி போதனை வந்ததால், புத்தம் புதிய கலைகள் பற்றி எல்லாம் தமிழில் சொல்ல வேண்டியதாயிற்று. அதற்கேற்ற வகையில் அதன் வளத்துக்கு உரம் ஊட்ட வேண்டியதாயிற்று.

எனினும் இலங்கையைப் பொறுத்த மட்டில் தமிழில் போதிய நூல்கள் வெளிவர வில்லை. தரமான நூல்களும் குறைவு. புதிய கலைகளை விளக்கும் நூல்களும் வெகு சில.

இந்தக் குறைபாடு நீக்கப்பட வேண்டும்.

சுதந்திர வேட்கையின் தாக்கமாக — விளைவாக புதிய இலக்கிய மறுமலர்ச்சி ஏற்பட்டு வருகிறது. ஆக்க இலக்கியங்கள் நூல்களாகவும் வெளி வருகின்றன.

அந்த ஆரோக்கியமான நிலை மகிழ்ச்சி தருகிறது. அதே போல அறிவு நூல்களும் வெளிவர வேண்டும். புதிய கலைகளை தெளிவாகச் சொல்லி விளங்க வைக்கும் நூல்கள் வெளிவர வேண்டும்.

அண்மையில் நடந்த புத்தக வெளியீட்டு விழா ஒன்றில் பேராசிரியர் ப. சந்திரசேகரம் இவ் விடயத்தை இடித்து உரைத்திருக்கிறார்.

அரசியல் சுதந்திரம் மேன்மையுற பொருளாதார சுதந்திரம் பிரதானம். இரண்டும் மேலோங்க அறிவு வளர்ச்சி அவசியம். அறிவு பரவ நூல்கள் அத்தியாவசியம்.

எனவே தமிழில் அறிவு நூல்களை வெளியிடுவதில் இப்போது இருந்தே அக்கறை காட்டுதல் சிறப்புடைத்து. அறிஞர்கள் இது விடயத்தில் ஆக்கபூர்வமாகச் செயற்பட வேண்டும். அறிவு

(8 ம் பக்கம் பார்க்க)

## கிரானில் - நேற்று;

# புலிகள் - படைகள் உக்கிரசண்டை

## முற்றுகை முறியடிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 28

மட்டக்களப்பு கிரான் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளுக்கும் ஆயுதப் படையினருக்கும் இடையில் நேற்று உக்கிரமான சண்டை நடைபெற்றது.

தமது முகாம் ஒன்றை முற்றுகையிட ஆயுதப்படையினர் எடுத்த பெருமுயற்சி முறியடிக்கப்பட்டதாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நேற்று அறிவித்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கிரான் பகுதியிலிருந்து சில மைல தொலைவில் உள்ள அடர்ந்த காட்டுப் பகுதி புலிபாய்ந்தகல்.

அங்கு தமிழீழ விடுதலைப் புலிகளின முகாம் ஒன்றை வாகனேரி, மட்டக்களப்பு முகாமிலிருந்து நேற்று அதிகாலை 4-30 மணிக்கு வந்த நூற்றுக்கணக்கான சிப்பாய்கள் முற்றுகையிட முயற்சித்தனர்.

சிப்பாய்களை எதிர்த்து விடுதலைப் புலிகள் உக்கிரமாக மோதினர். மோதல் நேற்று மாலை வரை தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருந்ததாக அறிவிக்கப்பட்டது.

கிரான் பகுதியூடாக புலிபாய்ந்தகல்லை நோக்கி முன்னேறிய ஆயுதப்படைப் பிரிவு ஒன்று இடைவழியில் பாலம் ஒன்று தகர்க்கப் பட்டதால் முன்னேற முடியாமல் திரும்பியது. புலிகளின் தாக்குதலை

(8ஆம் பக்கம் பார்க்க)

## இரத்மலானையில் மாசிட்டி விமானம் எரிந்து நாசம்

கொழும்பு, ஜூன் 28

இந்தாலைய மாசிட்டி விமானம் ஒன்று நேற்று இரத்மலானையில் விபத்துக்குள்ளாகி எரிந்து நாசமாகியது.

பறந்து கொண்டு இருக்கையில் விமானத்தில் திடீரென தீப்பிடித்தது. விமானம் உடனடியாகத் தரை இறக்கப்பட்டது தீயணைக்கும் படையினர் விரைந்து வந்தும் தீயை அணைக்க முடியவில்லை.

விமானத்தில் இருந்த இரண்டு இலங்கை விமானிகளும் உயிர் தப்பினர்.

(உ-எ-2)

### சுபநேரம்

28—6—1986

சனிக்கிழமை

சுபநேரம்:-
2 55 முதல் 4 25 வரை
ராகுகாலம்:-
8 55 முதல் 10 25 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## ஆறு போர்க்கப்பல்கள் வடபகுதிக்கு வந்தன

### 400 கமாண்டோக்களும் வந்தனர்

யாழ்ப்பாணம், ஜூன் 28

கொழும்பில் இருந்து ஆறு நவீன போர்க் கப்பல்களும் 400 பொலீஸ் கமாண்டோக்களைக் கொண்ட ஓர் படையும் வியாழன் இரவு வடபகுதிக் கடற் பகுதிக்கு வந்தன.

இதுபற்றி அறியப்படுவதாவது:

வியாழன் காலை இக் கப்பல்கள் கொழும்பில் இருந்து புறப்பட்டன.

அன்று மாலையே இக் கப்பல்கள் வடபகுதிக் கடல் பகுதியை அடைந்தன.

சுமார் 400 பொலீஸ் கமாண்டோக்களும் இக் கப்பல்களில் வந்து இறங்கினர். காரைநகர், காங்கேசன்துறை, வல்வெட்டித்துறை முகாம்களுக்கு இவர்கள் பின்னர் போய்ச் சேர்ந்தனர்.

(8ஆம் பக்கம் பார்க்க)



தெற்கில் இளைஞர்களுக்கு இடைவெளி இல்லாமல் இராணுவப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அரசாங்க ரூபவாஹினி அதனை நாள் தவறாமல் காட்டி வருகிறது.

அதே தோரணையில் வடக்கில் யுவதிகளுக்கு இராணுவப் பயிற்சி அளிக்கப்படுகிறதா என்று மூக்கில் விரலை வைக்கிறீர்களா?

அப்படியானால் ஏமாந்தீர்கள், போங்கள்!

கடந்த 19ஆம் திகதி யாழ் இந்து மைதானத்தில் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட உடற்பயிற்சிப் போட்டியின் போது அணி வகுத்து இயங்கிய பாடசாலை மகளிர் அணி ஒன்றைத் தான் படத்தில் காண்கிறீர்கள்.

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 66 அணிகள் இந்தப் போட்டியில் பங்கு பற்றின. (உ)

## இருவர் பலி

மட்டக்களப்பு, ஜூன் 28

களுவாஞ்சிக்குடி கடற்கரையோரப் பகுதியில் நேற்றுக் காலை 6 மணி முதல் 10 மணி வரை ஆயுதப் படையினர் நடத்திய தேடுதலின்போது இருவர் சுட்டுக்கொல்லப் பட்டதாகத் தெரியவருகிறது. ஐந்துபேர் கைது செய்யப்பட்டனர்.

## 497 பேர் பூஸாவுக்கு

திருகோணமலை, ஜூன் 28

திருமலை நகரில் கைதான 1,036 பேரில் 515 பேர் விடுவிக்கப்பட்டு விட்டனர்.

497 பேர் பூஸாவுக்கு அனுப்புவதற்காக திருகோணமலைக் கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இப்படி திருமலைப் பாதுகாப்பு அதிகாரிகள் திருமலைப் பிரசைகள் குழுவிற்கு அறிவித்துள்ளனர்.

(உ-எ-150)

## பகரிப்பு

திருகோணமலை ஜூன் 28

கடந்த வியாழக்கிழமை தம்பலகமம், சேருநுவர கிராமங்களில் பணியாற்றும் ஊர்காவல் படையினரிடம் இருந்து 33 துப்பாக்கிகள் தீவிரவாதிகளினால் அபகரிக்கப்பட்டன.

இப்படிப் பாதுகாப்பு வட்டாரம் தெரிவித்தது.

தம்பலகமத்தில் 19 துப்பாக்கிகளும் சேருநுவரவில் 14 துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டன. இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டது.

(எ 105)

## 16 தமிழர்கள் தம்பலகமத்தில் கடத்தப்பட்டனர்

திருகோணமலை ஜூன் 28

தம்பலகமம் கிராமத்தில் கடந்த வியாழன் மாலை 16 தமிழர்களை ஊர்காவல் படையினரால் கடத்திச் செல்லப் பட்டனர்.

லக்ஷ்மி அரிசி ஆலையில் வேலை செய்து வந்த 15 தொழிலாளரும் ஆலை முதலாளியின் மனைவியுமே கடத்திச் செல்லப் பட்டவர்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

ஆலை முதலாளி பாரிசவாதத்தினால் பீடிக்கப் பட்டுப் படுத்த படுக்கையாக இருந்ததினால் அவர் கடத்திச் செல்லப்படவில்லை.

கடத்திச் செல்லப்பட்டவர்கள் பற்றி தகவல் எதுவும் தெரியவில்லை.

(உ-எ-150)

## 6 பேர் சுட்டுக் கொலை

திருகோணமலை ஜூன் 28

திருகோணமலை, சாம்பல்தீவுப் பகுதியில் கடந்த வியாழன் மாலை சிப்பாய்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 6 தமிழர்கள் உயிரிழந்தனர்.

இவர்களில் ஒருவர் பெண். 5 பேரின் பெயர் விவரங்கள் இன்னும் கிடைக்கவில்லை.

ஆறுவது நபரான சாம்பல்தீவைச் சேர்ந்த டாக்ஸி சாரதி தங்கராசா என்பவர் டாக்ஸியுடன் சேர்த்து எரிக்கப் பட்டார்.

இறந்தவர்கள் அந்தக் கிராம வாசிகள் என்று தெரிய வந்துள்ளது.

(உ-எ-150)

## சிங்கள யுவதியும் மரணம்

திருமலை — தம்பலகமத்துக்கு இடையில் 6 ஆம் கட்டை என்ற இடத்தில் பெரும்பான்மை இனத்துக்குச் சொந்தமான இரண்டு லொறிகள், ஒரு கடை, ஒரு வீடு ஆகியன தீக்கிரையாக்கப்பட்டன.

மங்கலிக்கா என்ற 18 வயதுப் பெண், எரிந்த கடைக்குள் சிக்கி மரணமானார்.

இச்சம்பவம் கடந்த வியாழன் இரவு 8 மணியளவில் இடம்பெற்றது.

இறந்த பெண்ணின் மரண விசாரணையை திருமலை நீதிவான் திரு. சுனில் இராஜபக்ஷ நடத்தினார்.

சுமார் 18 பேர் அளவில் தீவிரவாதிகள் ஆயுதங்களுடன் வந்து தாக்குதலை நடத்தியதாக மரண விசாரணையில் சொல்லப்பட்டது.

கொலை என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது.

தாக்குதல் நடந்த இடம் இராணுவ முகாமில் இருந்து ஒரு மைல் தூரத்தில் உள்ளது.

(உ-எ-150)

## திருமலையில் 24 பேர் மீது தீவிர விசாரணை

திருகோணமலை ஜூன் 28

திருகோணமலை நகரில் சுற்றி வளைத்து நடத்தப் பட்ட தேடுதலில் கைது செய்யப்பட்ட 1036 பேரில் முகமூடி நபர் ஒருவர் தலையாட்டியதைத் தொடர்ந்து 24 தமிழ் இளைஞர்கள் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் தனியாக கோட்டை இராணுவ முகாமில் வைக்கப்பட்டுள்ளனர்.

24 பேரின் பெயர் விவரங்கள் வருமாறு:

எஸ் சார்ள்ஸ், ரி சுபேந்திரன், எஸ், பூலோகராசா, எம். மோகனசுந்தரம், எஸ். வசீசிலாஸ்.

பி. பாலச்சந்திரன், ஆர். யேசுராஜா, எஸ். அருளானந்தன் ஜி. ரட்ணசிங்கம், எஸ். அன்ரனி,

இ. அன்னதுரை, கே. கிருபாகரன், எஸ் யோகராசா, பி. மகாதேவன், எம். மகேந்திரன்

ஆர். மோகனராசா, சி. இராமச்சந்திரன், ரி ஸ்ரீ இரத்னம், கே. சூரியகுமார், ஆர். கதிரேசலிங்கம்

ஜி ரவீந்திரன், எஸ். தர்மராஜா, க. ரமேஷ், எஸ். துரைராஜா

(உ-எ-150)

## தமிழர் கூட்டணி புதிய யோசனை பற்றி இன்று ஆராயும்

புதுடில்லி, ஜூன் 28

இலங்கை அரசின் புதிய யோசனைகளை தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் குழு இன்று ஆராயவிருக்கின்றது.

அதற்கு இடையில் புதிய யோசனைகள் குறித்துக் கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

நேற்று இலங்கையின் புதிய யோசனைகள் உத்தியோகபூர்வமாக இந்திய அரசினால் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களிடம்

(8ஆம் பக்கம் பார்க்க)

## அமரர் சண்முகம் நினைவுக் கட்டுரைப் போட்டி.

அமரர் க. சண்முகம் நினைவாக ஆண்டு தோறும் கட்டுரைப் போட்டி நடத்தி, மாணவர்கள் மத்தியில் சிந்தனையைத் தூண்டி, அவர்களின் எழுத்தாற்றலை வளர்ப்பது எமது நோக்கம்.

இந்த வரிசையில் இடம்பெறும் முதலாவது போட்டி இது.

பாடசாலை மாணவர்களுக்கான இப்போட்டி, பின்வரும் மூன்று நிலைகளில் நடைபெறும்.

* ஆரம்ப பிரிவு :- 6ம், 7ம், 8ம் வகுப்புகள்
* இடைநிலைப்பிரிவு:- 9ம், 10ம் வகுப்புகள்
* உயர்தர பிரிவு: க. பொ. த. உயர்தர வகுப்பு.

கட்டுரைப் போட்டிக்குரிய தலைப்புகள் வருமாறு:-

ஆரம்ப பிரிவு :-
"அன்றட வாழ்க்கையில் சமயம்"

இடை நிலைப்பிரிவு:-
"சமயமும் அறிவியலும்".

உயர்தர பிரிவு:-
"சமயம் காட்டும் அன்புநெறி"

ஆரம்ப பிரிவினர் புல்ஸ்காப் தாளில் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமலும், இடைநிலைப் பிரிவினர் மூன்று பக்கங்களுக்கு மேற்படாமலும் உயர்தரப் பிரிவினர் நான்கு பக்கங்களுக்கு மேற்படாமலும் கட்டுரைகளை எழுதும்படி வேண்டப்படுகின்றனர்.

ஒரு மாணவன் ஒரு கட்டுரை மட்டுமே போட்டிக்கு அனுப்பலாம். அதுவும் அவரது சொந்தப் படைப்பாக இருத்தல் அவசியம்.

கட்டுரையைப் போட்டிக்கு அனுப்பும்போது பாடசாலை அதிபரின் உறுதியுரை இணைக்கப்படல் வேண்டும். கட்டுரையாளர் தமது பாடசாலை மாணவன் என்பதையும், கட்டுரை மாணவனது சொந்தப் படைப்பு என்பதையும் அதிபர் தமது உறுதியுரையில் தெளிவுபடுத்துவது முக்கியம்.

இப்போட்டியில் நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது.

உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட், நிறுவனத்தின் ஊழியர்கள், அவர்களின் குடும்பத்தினர் ஆகியோர் இப்போட்டியில் பங்கு பெற முடியாது.

கட்டுரைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அமரர் சண்முகம் நினைவுக் கட்டுரைப் போட்டி" என்று குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

போட்டி முடிவு நாள்:- 27 - 07 - 1986.

அனுப்பவேண்டிய முகவரி:-
பொறுப்பாளர்,
அமரர் சண்முகம் நினைவுக் கட்டுரைப் போட்டி.
மே/பா சஞ்சீவி,
த. பெ. எண்: 23,
யாழ்ப்பாணம்.

பரிசுகள்:

ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியே வழங்கப்படவுள்ள 3 பரிசுகளின் விவரங்கள் வருமாறு:-

| | |
|---|---|
| முதற்பரிசு | — ரூபா. 500/- |
| இரண்டாவது பரிசு | — ரூபா. 200/- |
| மூன்றாவது பரிசு | — ரூபா. 100/- |

இவற்றுடன் முதற் பரிசு பெறும் மாணவன் பயிலும் பாடசாலைக்கும் தனியான பரிசு உண்டு.

போட்டி முடிவுகள் சஞ்சீவியில் வெளியிடப்படும்.

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய நல்லுணர்வை புரிந்து நடக்காவிடில் விளைவுகளை இலங்கை அரசு எதிர்நோக்க வேண்டிவரும்

நாட்டின் சனத்தொகையின் ஒரு முக்கிய பிரிவினர் மீது இலங்கை அரசு கடந்த இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாக யுத்தம் ஒன்றை நடத்தி வருகின்றது.

அண்மையில் ஜெயவர்த்தன — அத்துலத் முதலி கூட்டு இறுதி இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் ஆயுதந் தாங்கிய தமிழர் தரப்புக்கும் (குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும்) நிராயுதபாணியான மக்களுக்கும் எதிராக இறங்கியது.

அரசின் இந்த நடவடிக்கை முறியடிக்கப்பட்டது. அதனால் அரசு இராணுவத்தீர்வின் இறுதித் தாக்குதலுக்கு தற்போதைக்குக் கைவிட்டுள்ளது. வெல்ல முடியாத முரட்டு யுத்தத்தில் ஒரு கட்டம் இது.

### அரசின் விரக்தி நிலை

யாழ்ப்பாணம் பட்டினத்தின் மத்தியில் இடம்பெற்ற விமானத் தாக்குதல் பிரதான ஆஸ்பத்திரி தாக்கப்பட்டது, விமானத் தாக்குதலினால் அப்பாவிப் பெண்கள், குழந்தைகள், ஆண்கள் கொல்லப்பட்டமை போராளிகளிடமிருந்து யாழ். பட்டினத்தை மீட்டு எடுக்கும் எண்ணத்துடன் 'தேடி அழிக்கும்' திட்டத்தைச்செயற்படுத்த சிங்களத் துருப்புக்களை முகாம்களில் இருந்து வெளியே அனுப்பப்பட்டமை போன்ற பயங்கரவாதச் செயல்கள், உண்மைகளை புரிந்து கொள்ள முடியாமல் விரக்தியுற்ற நிலையில் இருக்கும் அரசு ஒன்றின் செயல்களாகவே அமைந்தன.

இலங்கை, ஒன்றரைக் கோடி மக்கள் தொகையைக் கொண்ட நாடாக இருக்கலாம்.

ஜெயவர்த்தன — அத்துலத் முதலி கம்பெனியின் செயல்களினால் சிங்கள தமிழ்மக்களின் மனநிலை, நோக்கம், அனுபவம் துக்ககரமான முறையில் பிளவுபட்டுக் காணப்படுகிறது.

### 'இந்து' எச்சரிக்கை

அந்த கம்பனியின் எதிரி நாட்டின் தலைப்பட்டினமான யாழ்ப்பாணம் கண் முன்னால் அழிய வேண்டும்கைப்பற்றப்பட வேண்டும், ஆகக் குறைந்தது சூறையாடப்பட்டு, எரிக்கப்பட்டு அழிக்கப்படவேண்டும் என்பதே.

### இராணுவக் கனவுகள் கூலிப்படைகள்

அடிப்படை ஜனநாயக உண்மைகள், பிரச்சினைகளைத் தவறான வழிகளில்

> ஜெயவர்த்தன அரசின் துரோகம்"- என்ற தலைப்பில் 'இந்து' ஆங்கில நாளிதழ் 1986 மே 31-ஆம் திகதி தனது சர்வதேசபதிப்பில் எழுதிய ஆசிரியர் தலையங்கத்தின் தமிழாக்கம் இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

கையாளும் அனுபவப்பட்ட, புத்திசாலித்தனமான அரசியல்வாதிகள் கூட இப்படியான இராணுவக் கனவுகளுக்குள் தான் சிக்கிக் கொள்வார்கள்.

'எதிரி' என்ற முறையில் செயல்படுபவர்களின் இராணுவபலம், தந்திரோபாயங்கள் பற்றி இலங்கைத் தமிழர்களும் இக்கால கட்டத்தில் அவர்களுக்கு உதவுபவர்களும் குறைத்து மதிப்பிடு செய்வது மிகவும் ஆபத்தானது.

அண்மைக்காலத்தில் தெற்கில் இருந்து வடக்குக்கு குறிப்பிடத்தக்க தொகை துருப்புக்கள் நகர்த்தப்பட்டுள்ளன.

எதிர்வரும் நடவடிக்கைகளுக்காக அத்துருப்புக்கள் சில இடங்களில் நிலை கொண்டுள்ளன.

பாகிஸ்தான், இஸ்ரவேல், மேற்கு நாட்டுக் கூலிப்படைகள் அங்கு நிலை கொண்டுள்ளன. இதைச் சிறு விஷயமாக எடுத்துக் கொள்ளக் கூடாது.

இராணுவ தீர்வில் இலங்கை அரசு நாட்டம் காட்டுவதும், அரசின் தலைவர்கள் இந்தியாவுடன் சில சமயம் சூடாகவும் சில சமயம் குளிராகவும் நடந்து கொள்ளுவதும், இரத்த ஆறு ஓடும் அனுபவம் ஒன்று நிகழ்ச்சி நிரலில் இருக்க முடியும் என்பதைக் காட்டுகின்றது. இலங்கையின் புற்று நோய் இந்திய வெளிநாட்டுக் கொள்கை, நடைமுறைகள் பற்றி நிர்ணயிக்கும் தகுதிப் பரீட்சையாக அமைந்துள்ளது.

### இந்திய நல்லுறவும் நிர்ப்பந்தமும்

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண 1983 நடுப்பகுதியில் இருந்து இந்தியா 'நல்லாதரவு' வழங்கி வருகின்றது.

அண்மைக்கால இராணுவ நடவடிக்கையின் பின்னர் ராஜதந்திர — அரசியல் ரீதியில் இந்தியாவின் நல்லாதரவைப் பயன்படுத்தி தனது முரட்டுத்தனமான மோதல் மூலம் தீர்வு காணப்படும் தனது எண்ணத்தை மூடி மறைக்க இலங்கை அரசு முயல்வதானது அயல் நாடுகளுடன் நல்லுறவு பேணும் இந்தியாவின் கொள்கை மீது பெரும் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தி உள்ளது.

ராஜீவ் காந்தியின் நிர்வாகத்தின் பெரும் பகுதி இவ்வாறுதான் பயன்படுத்தப்பட்டது விரைவான தீர்வு ஒன்றைக் காண வேண்டியதற்குத் தேவையான அடிப்படையில் இணக்கம் காண வேண்டியது. முக்கிய பிரச்சினைகளை அணுகும் முறை, சிக்கலான சந்தர்ப்பங்களில் முக்கியத்துவம் இல்லாத அரசு அதிகாரிகளை அனுப்பி பிரச்சினைகளைக் கையாள அனுமதித்தது—போன்ற காரணங்களினால் தான் முட்டுக்கட்டைகளும் தடங்கல்களும் ஏற்பட்டன.

தற்போது இடம் (7 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்க அலுவலகங்களில் "சிகதி"

### சீனி இருந்தும்தட்டுப்பாடு ஏன்?

தற்போதைய சூழ் நிலை காரணமாக யாழ் கோட்டைப் பகுதியில் உள்ள திணைக்களங்கள் பல இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. இதனால் பொதுமக்களுக்குப் பல கஷ்டங்கள். இவற்றினைக் குறைப்பதற்கு அரசுக்கு அதிக அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. அரச ஊழியர்கள் முன்னர் ஒருவழி போக்குவரத்துச் சேவைகளின் மூலம் தங்கள் திணைக்களங்களுக்குச் சென்றவர்கள்; தற்பொழுது ஏற்பட்ட இடமாற்றத்தினால் பலவழிப் பாதைகளை உபயோகிக்கிறார்கள். இதனால் பிரயாணச் செலவுகள் அதிகம். பிறதேசவையிலுள்ளவர்களுக்கு விசேட கொடுப்பனவுகள் வழங்கப்படுவதுபோல் இவர்களுக்கும் வழங்கினால் என்ன? இவர்களும் கஷ்டமான பிரதேசங்களில் தான் கடமை புரிகின்றனர். யார் இதனைக் கவனிப்பார்கள்?

* * *

1977ஆம் ஆண்டிற்கு முன்னர் லஞ்சத் திணைக்களத்தின் விசாரணைகளின் பெறுபேறுகள் பத்திரிகை, வானொலி ஆகியன மூலம் பெரிதளவில் விளம்பரப்படுத்தப்பட்டன. அக்காலத்தில் புகார்கள் அதிகம். ஆனால் தற்பொழுது அரசியல் மட்டத்தில் விசாரணைகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டும் முடிவுகள் வருவதில் தாமதம். முன்னர் புகார்கள் கிடைத்ததும் லஞ்சம்பெறும் சந்தேக நபருக்குப் பணம் வழங்குவதற்குக் குறிப்பிட்ட உத்தியோகத்தர் ஒரு தொகையை முற்பணமாகப் பெறுவது வழக்கம். ஆனால் லஞ்சம் பெறுபவர்களை நினைத்த நாட்களில் சிக்க வைப்பது கஷ்டம். இதனால் பணத்தினைப் பெற்ற உத்தியோகத்தர் அப்பணத்தைப் பல நாட்களுக்கு தாம் வைத்திருக்க வேண்டிய நிலை உருவாகியது. சில குறைபாடுகளை அவதானித்த லஞ்ச திணைக்களம் பின்னர் திணைக்கள அதிகாரிகள் முற்பணமாகப் பெறும் நோட்டுக்களின் தொடர் இலக்கங்களைப் பதிவு செய்த பின்னரே வழங்கத் தொடங்கியது.

* * *

அரச பணியாளர்கள் சிலர் உயர் பதவியின் நிமித்தம் பல சமூக சமய ஸ்தாபனங்களில் பதவி பெற்று தங்கள் கருத்துக்களை திணிப்பது இன்றைய நடைமுறையாகத் தெரிகின்றது. இதற்கு நோக்கங்கள் கற்பிக்கப்படலாம்.

அரச ஊழியர் அல்லது அதிகாரி ஒருவர் தொடர்ச்சியாகப் பல ஆண்டுகள் ஒரே இடத்தில் பதவி வகிக்கும் பொழுது இப்படியான நிலைப்பாடுகள் எழுவது இயல்பு. ஆனால் இப்பணியாளர்கள் தாங்களாகவே உணர்ந்து தங்கள் ஆசனங்களை மாற்றிக்கொள்வது, தாங்கள் பாதிக்கும் நன்னெறிக்கும் நீதிக்கும் உதவுவதாகும். சில திணைக்களங்களில் ஊழியர்கள் மாற்றப்படுகின்றனர். உயர் அதிகாரிகள் பல ஆண்டுகள் அப்படியே நிலைப்படுத்தப்பட்டு விடுகின்றனர்.

* * *

தட்டுப்பாடு வரும் பொழுது கட்டுப்பாடு அவசியமாகின்றது. உணவுப் பொருள்களுக்குப் பொறுப்பான அதிகாரிகள் தாங்கள் சென்றோம் பார்த்தோம் என்ற அறிக்கைகளுடன் நின்றுவிடக்கூடாது. அவர்களால் என்ன அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன, என்பதே முக்கியமானது. சென்ற வாரம் கையிருப்பில் போதியளவு சீனி இருந்தும் அதன் விலை கூடியதற்குக் காரணம் என்ன என்பது ஆராயப்படவேண்டும். கூட்டுறவுச் சங்கங்களால் தனியார் துறையினருக்கும் சீனி வழங்கக் கூடாதென்ற பணிப்புரைகள் வழங்கப்பட்டனவா? எல்லா கூட்டுறவுச் சங்கங்களுக்குப் நேரில் விஜயம்செய்த கூட்டுறவு உதவி ஆணையாளர் இதுபற்றி போதியளவு சீனி இருப்பதை உறுதிப்படுத்திக் கொண்டார். அப்படியாயின் சங்கங்கள் ஏன் தனியார் துறையினருக்கு சீனி வழங்கவில்லை என்பது தெரியவில்லை. தனியார் கடைகளில் கணக்கு வைத்துப் பொருள் வாங்குவோர் கூட்டுறவுச் சங்கங்களில் திடீர் என்று எவ்வாறு சீனி வாங்க முடியும்? இப்படியான புறநிலைகளையும் மனதிற் கொண்டு அரச அதிகாரிகளும் சமயோசிதமாகப் பணியாற்றுவது அவசியம்.

# மக்கள் பணிக்கு தன்னை ஒப்படைத்த சமூகத் தொண்டன் விசுவலிங்கம்

1947 ஆம் ஆண்டு ஆங்கிலேயரின் ஆசியாக் கண்ட ஏகாதிபத்திய ஆட்சியின்இறுதி ஆண்டு. காலனித்துவ ஆட்சி சரிந்த ஆண்டு. இந்த ஆண்டில் ஆசியாவிலுள்ள காலனித்துவ நாடுகள் எங்கும் புரட்சி நிலை உச்சக்கட்டத்தில் இருந்தது. இலங்கையும் இந்நிலைக்குவிதிவிலக்காக இருந்ததில்லை.

இம் என்றால் சிறை வாசம் ஏன் என்றால் வன வாசம் என்ற ஆட்சி விதிகளைக் கொண்டிருந்த பிரித்தானியர் ஆட்சிக்கு எதிராக இலங்கைத் தொழிலாளர்கள் போர்க்கொடி உயர்த்தினார்கள் வடமாகாணமும் போர்க்கோலம் கொண்டிருந்தது அரசாங்க ஊழியர்கள் 1947 ஆம் ஆண்டு மே மாதம் வேலை நிறுத்தத்தில் குதித்தபொழுது பிரித்தானியரின் ஆட்சிக்கெடுபிடிகளுக்கும் அந்நாள் அரசாங்க அதிபர் திரு வாட்சன் அவர்களின் அச்சுறுத்தல்களுக்கும் நின்று பிடிக்கமுடியாத ஊழியர்கள் பலர் வடமாகாணத்தில் வேலைக்குத் திரும்பினர். ஆனால் பன்னிரண்டு இளைஞர்கள் போர்க்கொடியைஉயர்த்திய வண்ணமே இருந்தார்கள் தோழர் கந்தசாமி ஜூன் மாதம் 5ஆம் திகதி கொலன்னாவையில் சுடப்பட்டு உயிரிழந்தார் என்ற செய்தியைக்கேட்டும் மனம் தளராது தமது சங்கத்தின் கட்டளையின்பின் வேலைக்குத் திரும்பினார்கள் இந்தப் பன்னிரு

> சமூகத் தொண்டன் அமரர் கா. விசுவலிங்கம் ஐயாவின் அந்தியேட்டி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (1-7-1986) ஆகும்.
>
> அவரை நினைவுகூரு முகமாக இக்கட்டுரையை 'சஞ்சீவி'யில் பிரசுரிக்கின்றோம்.

வரில் அன்று துடிதுடிப்பான இளம் ஊழியனாக யாழ் பொலீஸ் திணைக்களத்தில் கடமையாற்றியவரும் இன்று எமது அஞ்சலிக்குரியவருமான சமூக சோதி திரு விஸ்வலிங்க ஐயாவும் ஒருவராக இருந்து தனது சக தோழர்களை நெறிப்படுத்தினார்.

### உதாரண புருஷர்

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற நெறிகளுக்கமைய இற்றைக்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன்னமே ஏற்பட்ட சோதனைக்கு முகம் கொடுத்து தனது வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர் விஸ்வலிங்கம் ஐயா அவர்கள்.

இவ்வாண்டு ஆனித் திங்கள் 2ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்து இறுதியாத்திரையை மேற்கொண்டார் அவர் தம் வாழ்நாளில் எண்ணற்ற நற்பணிகளில் முன்னின்று உழைத்தார். எதிர்ப்பட்ட இன்னல்களுக்கு மத்தியிலும் சளைக்காது நின்று உதாரண சமூக சேவையாளனாக வாழ்ந்து எம் எல்லோருக்கும் ஒளிமிகு வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

மேற்கூறிய நெறிகளுக்கமைய அரசாங்க சேவையில் கடமையாற்றும் காலத்தில் அவர் எல்லோரது மதிப்பையும் பெற்று விசுவர் என்று அன்பாக அழைக்கப்பட்டார். பொலீஸ் திணைக்களத்தில் நீண்ட காலமாகக் கடமையாற்றினார். அங்ஙனம் கடமையாற்றும் காலத்தில் அவரது அலுவலகத்தில் ஒரு முறை சில ஊழியர்கள் திடீரென மாற்றம் செய்யப்பட்டார்கள். பொலீஸ்மா அதிபரிடம்' ஐயா சென்று, ஏன் இவர்கள் மாற்றப்பட்டார்கள்? என வினவிய பொழுது, அவர்களது நடவடிக்கை பற்றி புலன் விசாரணை செய்யப்பட்ட பின் மாற்றப்பட்டார்கள் என்ற பதில் வந்தது. புன்முறுவல் பூத்த முகத்துடன் ஐயா அவர்கள் தானும் இத்திணைக்களத்தில் கடமையாற்றத் தகுதியுள்ளவனா என்று புலன் விசாரணை செய்யுங்கள் எனக் கூறியபொழுது அந்த அதிகாரி "உங்களைப்பற்றிய பூரண விசாரணையில் நூற்றுக்கு நூறு வீதம் கடமையில் நேர்மை நிலை கொண்டுள்ளீர்கள் என அறிந்துள்ளோம்" எனப் பதிலளித்தார்.

### சேவையின் சின்னம்

ஐயா அவர்கள் அரசாங்க சேவையில் கடமைபுரியும் காலத்தில் தனது கடமை அலுவலகத்துடனும் அவரது குடும்பத்துடன்தான் என்று கருதாமல் சமயம், கல்வி, சமூகம் ஆகிய துறைகளிலும் மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை என்ற பெருநோக்குடன் சேவையாற்றியுள்ளார் பம்பலப் பிட்டியில் வளர்ந்து

த. கணநாதலிங்கம்

இன்று உயர்ந்து விளங்கும் கொழும்பு இந்துக் கல்லூரி ஐயா அவர்களின் தளராத சேவையின் சின்னமாக அமைந்துள்ளது

### பணிகளின் பரம்பு

சமயப்பணிகளில் எங்கெல்லாம் அவரது பணிகள்தேவைப்பட்டனவோ அங்கெல்லாம் 'என் கடன் பணி செய்து



அமரர் விசுவலிங்கம்

கிடப்பதே' என்ற கோட்பாட்டுக்கமைய விளம்பரங்களை வேண்டாது பணி புரிந்தார். எனினும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையில் அவர் ஆற்றிய பணிகள் நிலையான பணிகளாக அமைந்தன. நாவலரது பதிப்புகளை மறுமதிப்புச் செய்து மக்கள் மீண்டும் நாவலரது பணிகளின் பயனைப் பெறவேண்டும். என ஆவல் கொண்டு நூல்களைப் பதிப்பித்தார்.

நாவலர் சபை நிரந்தரமான சில திட்டங்களை வகுத்து நீண்ட காலப் பணிகளில் இறங்கவேண்டுமென்ற எண்ணத்தினைக் கொண்டு அதற்காக அமைக்கப்பட்ட உபகுழுவின் தலைமைப் பொறுப்பை ஏற்று [illegible] முன் இறைவன் தன் [illegible] சேவைக்கென தன்னுடன் அணைத்துக் கொண்டு "தந்ததுன் தன்னை கொண்டது எந்தன்னை சங்கரா யார்கொலோ சதுரர்" என்று அந்த ஆன்மாவை நித்தியமும் பாடச் செய்து விட்டானோ? சபைக்கு இதனால் ஏற்பட்ட தாக்கத்தை அந்தச் சங்கரன் உணர்ந்தாரில்லையே!

ஐயா அவர்களின் அகதிகள் புனர் வாழ்வு சமூகப்பணி அவரது சமூக சேவையின் சிகரமாக உயர்ந்தது. அரசாங்க சேவையில் அவரது கடமைகள் நிறைவேறும் தறுவாயில் அகதிகள் புனர் வாழ்வுத் திருப்பணி அவரைக் காத்து நின்றது.

1958 ஆம் ஆண்டு இனக்கலவரத்திற்கு பின் 1977 ஆம் ஆண்டில் நாடெங்கிலும் இனக்கலவரம் ஏற்பட்டு எமவர் ஆயிரக்கணக்கில் உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி இருக்க இடமின்றி அகதிகளாக மாறினர். அகதிகள் முகாம்கள் பல தோன்றின. இம் முகாம்களில் கொழும்பு இந்துக் கல்லூரியில் அமைந்த முகாமில் ஐயா அவர்கள் அமரர் நித்தியானந்தன் போன்ற சமூக சேவையாளருடன் சேர்ந்து அகதிகள் புனர் வாழ்வுச் சமூகப்பணியில் குதித்தார். காந்தியடிகளின் வாழ்க்கையில் தென்னாபிரிக்க சேவை ஆச்சாரியார் விநோபாவின் பூதான இயக்கம் நாவலர் அவர்களின் கஞ்சித் தொட்டிப் பணிகளில் அடங்கியுள்ள தெய்வீக அம்சங்கள் ஐயா அவர்களுக்கு அகதிகள் புனர் வாழ்வின் முக்கியத்துவத்தை உணர்த்தி இந்தப்பணியில் ஈர்த்தது. ஐயா அவர்களை ஈர்த்த இப்பணியை நிறைவேற்றுவதற்கு தமிழர் புனர் வாழ்வுக் கழகம் என்ற அமைப்பை ஏற்படுத்தினர்.

இப்புனர்வாழ்வு சமூகப் பணிக்கென இலக்கணம் வகுத்தார். அகதிகளை ஒரு சில நாட்களுக்கோ அல்லது சில வாரங்களுக்கோ [illegible] உணவு அளித்தால் மட்டும் போதாது; அகதிகள் உடைமைகளை இழந்தும் அவர்களிற் சிலர் தம்மைப் பேணிப் பராமரித்த உயிர்களையும் இழந்து வாழ்வில் ஒளியற்றவர்களாக்கப்பட்டுள்ளவர்கள். எனவே அவர்கள் எல்லோரும் மீண்டும் சமூகத்தில் ஒளி நிறைந்த வாழ்க்கையை வாழவேண்டும். தொழிலற்றவர்கள் தொழில் பெற்று வாழவேண்டும் மீண்டும், தமது முன்னைய கிராமங்களுக்குச் செல்ல முடியாதவர்கள் புதிய கிராமங்களை அமைத்து வாழவேண்டும் இவைகளை நிறைவேற்ற திட்டங்கள் அமைய வேண்டும், நிதியங்கள் ஏற்படுத்த வேண்டும் நிதி மிகுந்தவர் உலகில் எந்நாட்டில் இருந்தாலும் பொற்குவை தர வேண்டும் அதுவும் அற்றவர் காசுகள் தரவேண்டும். இந்த நெறிகளுக்கமைய கழகம் இயங்க வேண்டுமென இலக்கணம் வகுத்தவர்.

இது மட்டுமல்ல இச் சேவையில் ஈடுபடுபவர் எப்படிப்பட்டவராக இருத்தல் வேண்டும் என்பதற்கு தனது வாழ்க்கையை இலக்கணமாக விளக்கியுள்ளார் "எண்ணிய எண்ணியாங் கெய்துவர் எண்ணியர் திண்ணியராகப்பெறின்" என்ற மறைமொழி கூறும் திண்மை வேண்டும். அந்த உயர்ந்த திண்மை பெறுவதற்கு ஒருவனது மனம், வாக்கு, காயம் ஆகிய திரி கரணங்கள் சுத்தியடைய வேண்டும். இதன் பலனே காரிய சித்தி.

### திரிகரண சுத்தியும் காரிய சித்தியும்

ஐயா அவர்கள் திரிகரண சுத்தி பெற்றிருந்தார். தமிழர் அகதிகள் புனர் வாழ்வுக் கழகம் 1977 ஆம் ஆண்டு தொடங்கி பல சித்தியான காரியங்களையும் 1983 ஆம் ஆண்டு ஏற்படுத்திய வரையறுக்கப்பட்ட அகதிகள் புனர் வாழ்வுக்கழகம் எத்தனையோ திட்டங்களை வகுத்து இன்றைக்கு இரண்டாயிரம் குடும்பங்களுக்கு புனர்வாழ்வு அளித்தமையும் எத்தனையோ புனர்வாழ்வுக் கிராமங்களை வட,கிழக்கு மாகாணங்களில் ஏற்படுத்தியமையும் ஐயா அவர்களது திரிகரண சுத்தியே.

இந்த சுத்தியே ஐயா அவர்களை எங்கெங்கு அவரது புனர் வாழ்வுச் சேவை தேவைப்பட்டதோ அங்கங்கெல்லாம் அவரை இறைவன் கொண்டு சென்று வழிப்படுத்தினன்.

1983 ஆம் ஆண்டு (7 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் பிரதேச சூழல் அதிகார சபை

26 06 1986ம் திகதி யாழ் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற யாழ் பிரதேச சூழல் அதிகாரசபையின் விசேட கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் தீர்மானம் பொதுமக்களின் தகவலுக்காகத் தரப்படுகின்றது.

தீர்மானம்:

"யாழ்ப்பாண குடாநாட்டில் உள்ள ஏதேனும் குளங்கள் ஏரிகள் வயல்கள், வாய்க்கால்களிலிருந்தும் களிமண்ணோ அல்லது இது போன்ற வேறுவகை மண்ணோ அகற்றப்படுதல் தடைசெய்யப்பட்டுள்ளது."

ஆகவே இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாமென பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

வை. மு பஞ்சலிங்கம்,
அரசாங்க அதிபர், மாவட்டச் செயலாளர்,
தலைவர்,யாழ்பிரதேச சூழல் அதிகார சபை.

கச்சேரி,
யாழ்ப்பாணம்.
1986-06-26.

பிரயாண ஒழுங்குகள்

● கனடா
● ஜேர்மனி
● பிரான்ஸ்
● டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், விசா, பொண்ட் (Bond)
ரிக்கட் ஆகியனவும்
செய்து கொடுக்கப்படும்.

கொழும்பு — டென்மார்க் நேரடிப் பயண ஒழுங்குகள் இப்பொழுது செய்யப்பட்டுள்ளதால் எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

INTERSUN GROUP
சின்னத்தம்பி அவெனியூ,
(மகளிர் கல்லூரிக்குஅருகாமையில்)
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் நிலைப்பாட்டு முக்கியத்துவமும் இலங்கைப் பிரச்சினையில் அதன் பொறுப்பும்

'தெற்காசிய சூழலில் இலங்கையின் இனப்பிரச்சினை' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக வணிக, புவியியல் மன்றங்கள் கருத்தரங்கு ஒன்றை இம்மாதம் 18 ஆம் திகதி நடத்தின.

இக் கருத்தரங்கில், வரலாற்றுத்துறை விரிவுரையாளர் திரு. மு திருநாவுக்கரசு ஆற்றிய உரையின் தொகுப்பு இங்கு தரப்படுகிறது.

தொகுத்துத்தருபவர்: திரு வி வரதசுந்தரம்

தெற்காசியாவில் இந்தியா ஒரு பிராந்திய வல்லரசாக விளங்குகிறது விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாகவும் இன்று சீனாவையும் விஞ்சி உலகின் மூன்றாவது நாடுகளின் வல்லரசாக இந்தியா வளர்ச்சி கண்டுள்ளது.

இந்தப் பின்னணியில் தெற்காசியாவில் இலங்கை ஒரு குட்டித் தீவுதான்

சோவியத் பிரதமர் செர்னன்கோவின் மரணச் சடங்குகளில் கலந்துகொள்ளப் பல நாடுகளின் தலைவர்கள் மாஸ்கோ சென்றிருந்தார்கள். அப்போது

## பொருளாதார, வெளியுறவுக் கொள்கைக்கு ஏற்பட்டுள்ள புதிய அச்சுறுத்தலை அடையாளம் கண்டுள்ளது பாரதம்

புதிய பிரதமர் கொர்ப்பசேவைக் காண்பதற்கு பாகிஸ்தான் ஜனாதிபதி விரும்பிய போதும் வாய்ப்பு அளிக்கப்படவில்லை. ஆனால் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் கொர்ப்பச்சேவும் பல மணித்தியாலங்கள் சந்தித்து உரையாடினர்கள்.

அதேவேளை அமெரிக்கா சென்ற ராஜீவ் காந்தியை வரவேற்க அமெரிக்க நாட்டின் இரு சபைகள் ஒரே அமர்வுக்கு அழைக்கப்பட்டன.

இவை எதைக் காட்டுகின்றன? சர்வதேச அரங்கிலே இந்தியாவுக்கு உள்ளமுக்கியத்துவத்தை இதனால் புரிந்துகொள்ள முடிகிறது. ஏன் இரு பெரும் வல்லரசுகளும் இந்தியாவைத் தன்பால் ஈர்க்க முயல்வதைக் காண முடியவில்லையா?

### இந்தியா மீது அச்சம்

இலங்கையில் நிகழும் கிளர்ச்சிகளை இந்தியா கட்டுப்படுத்துகிறது என்றபயம் இன்றுநேற்று ஏற்பட்டது அல்ல. 1970 இல் சிறில் மத்தியு எழுதிய நூலின் அட்டையில் இலங்கைக் கிளர்ச்சிகளை இயக்கும் கயிறு தென்னகத்தில் காணப்படுவதாகவும், இந்தியாவின் பாரிய கால்கள் இலங்கையில் பதிவதாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளன.

சிங்களம் மட்டும் சட்டத்தை முன்மொழிந்து பேசுகையில் இதே வித பயத்தை அப்போதைய பிரதமர் பண்டாரநாயக்கா கூறிவைத்தார்.

புவியியல் சார்ந்த அரசியல் கூறுகளை அவதானித்தால், இந்தியாவின் தெற்கில் தமிழர்கள் வாழ்வதும், இங்கு தமிழர்கள் வாழ்வதும் ஆன இனரீதியான அமைவு(Ethnic Composition) இத்தகைய பயத்தை உருவாக்குகிறது.

### தெற்கு ஆசியாவில் இந்துக்கள்

எந்தக் காலத்தை எடுத்துக்கொண்டாலும், தெற்காசியாவில் பெரும்பாலான மக்கள் இந்துக்களாகவே இருந்துள்ளார்கள். சோழப் பேரரசன் காலம் ஆனாலும் அசோகன், அக்பர் காலம் எனினும் இதுவே உண்மை.

அசோகன் பௌத்த பேரரசை உருவாக்கிய காலத்திலும் தெற்காசியாவில் இந்துக்களே பெரும்பான்மையாக வாழ்ந்துள்ளார்கள். அக்பர் இஸ்லாமிய பேரரசை உருவாக்கிய காலத்திலும் இந்துக்களே இப்பிராந்தியத்தில் பெரும்பான்மை மக்கள் பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக் காலத்திலும் தெற்காசியாவில்இந்துக்களேபெரும்பான்மையினர்.

எனவே, எல்லாக் கால கட்டத்திலும் தெற்காசியாவில் ஓர் இந்துப் பாரம்பரியம் நிலவியமை தெளிவாகிறது. இதுவும் ஒரு காரணியாகும்.

### ஆபத்தான அயல்நாடு

1949இல்இலங்கையை இந்தியவுடன் ஒன்றிணைக்கும்படி கோரினார் வைத்தியா. பின்னர் 1951இல் பணிக்கர் இலங்கையையும் பர்மாவையும் இந்தியாவின் ஆட்சியின் கீழ் கொண்டு வருதல் அவசியம் என்றார். அரசியல் ரீதியில் நோக்கினால் இலங்கைக்கு ஆபத்தான அயல்நாடு இந்தியா என்றார் ஐவர் ஜெனிங்ஸ். இலங்கையின் முதலாவது பிரதமர் டி. எஸ். சேனநாயக்காவும் இத்தகைய அச்சத்தை வெளியிட்டார்.

அக்காலத்து இலங்கையில் திருகோணமலை

(7ஆம் பக்கம் பார்க்க)

## கடல் கடந்த கடிதம்

### எலிப்படை என்னாச்சு?

தம்பி,

பெருமளவில் 'நண்பர்கள்' வந்து குவிந்துள்ளார்கள் என ஏக்கத்துடன் எழுதிய கடிதம் கிடைத்தது.

ஊரோரமாய் அந்தப் பக்கம் -- அறுவடைக் காலம் சிதறுண்ட தானியங்களைச் சேகரித்துச் சேமிக்க எலிகள் வந்தன; சிறு பொந்துகள் அமைத்தன; தானியங்கள் குவிந்தன.

ருசிகண்ட எலிகள் அரைகுறையாக விளைந்த தானியங்களையே அறுக்கத் தொடங்கின; புதுப் பொந்துகளை அமைக்கவும் முயன்றன.

எலிகளைப் பிடிக்க இளநாகம் வயற்பக்கம் வந்தது. எலிகள் பயந்தன; மிரண்டன. எலியரசன் கேட்டான், என்ன செய்வதென்று! ''நாகம் வரும் வழியில் நின்று மணியொன்றை அடிப்போம் - எல்லோரும் ஓடித் தப்பலாம்!'' என்ற ஆலோசனை நிராகரிக்கப்பட்டது பூனைக்கு மணிகட்ட முன்னர் எடுத்த முயற்சி தோல்விகண்டதல்லவா?

எண்ணிக்கையில் நம்பிக்கை கொண்ட எலி ஒன்று சொன்னது; ''எல்லோரும் சேர்ந்து பாடுங்கள்; இசைபோடுங்கள்; ஒலி மிகுதியால் நாகம் வெருண்டு ஓடிவிடும்!'' எல்லா எலிகளும் சேர்ந்து கடல் ஒலிப்பால் இசைத்தன நாகம் பெரிதாக ஒன்றும் செய்யவில்லை; சற்றுச் சீறியது: எலிகள் சிதறுண்டு ஓடின.

தம்பி இது என் கற்பனை அல்ல. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவன் காட்டிய காட்சி!

'ஒலித்தக்கால் என்னும் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும்.''

வீட்டிலுள்ள திருக்குறளை மீண்டும் படித்துப் பார்! பரிமேலழகர் தரும் விளக்கத்தில் ஒரு வரி மாத்திரம் தருகிறேன், உடனடித் தெளிவுக்காக.

''வீரரல்லாதார் பலர் திரண்டு ஆர்த்தால் அதற்கு வீரன் அஞ்சான்''

அன்புடன்
- சிவா -

# பல நிலையிலும் பாதிப்படையும் யாழ்ப்பாண வைத்திய சேவை

### குறையும் நிறையும்

யாழ் மாவட்ட மக்களின் வாழ்க்கைச் சக்கரத்தின் கேந்திரஸ்தானமாக விளங்குவது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை என்றால் அது மிகையாகாது.

உயிராபத்துக்கு முகம் கொடுத்து வாழ்கின்ற நமது மக்களுக்கு உறுதி பயப்பதாக இருப்பது இவ்வைத்தியசாலை. மக்களின் துயர் துடைப்பவர்கள் இவ்வைத்தியசாலையில் பல மட்டங்களிலும் கடமை புரியும் பணியாளர்கள்.

நச்சினார்க்கு இனிமை தரும் இடமான யாழ் போதனா வைத்தியசாலை அத்தியட்சகர் மருத்துவ கலாநிதி எஸ் நச்சினார்க்கினியன் வைத்தியசாலையின் குறைநிறைகளை சஞ்சீவி மூலம் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார் இதோ...

தமது கருத்துக்களை அவர் தெரிவித்த போது கீழ்க்கண்ட விடயங்களை விவரமாக அவர் விளக்கிக் கூறினர்.

### மருந்துகள்

மருந்துகளைப் பொறுத்தளவில் பெரும்பாலும் தட்டுப்பாடில்லை எனலாம் ஆஸ்பத்திரியில் இல்லாத மருந்துகளை வெளியில் தனிப்பட்ட மருந்துக்கடைகளில் ஆஸ்பத்திரி செலவில் வாங்கி நோயாளருக்கு விநியோகிக்கிறோம் யாழ் மாவட்ட மருந்துக்கடைகளில் கிடைக்காத மருந்துகள் நோயாளருக்கு உயிர் காப்பாற்ற அவசியமாகத் தேவைப்பட்டால் கொழும்பிலிருந்து நாம் வாங்கிக் கொடுக்கிறோம்.

இருப்பினும் ஓர் ஆஸ்பத்திரியில் நோயாளருக்குப் பலரக மருந்துகள் தேவைப்படுவதால் ஏதோ ஒரு காலகட்டத்தில் ஏதேனும் ஒரு சில மருந்து வகைகளில் தட்டுப்பாடு ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகும்.

### ஒட்சிசன்

அண்மையில் எழுந்த நிலைமை காரணமாகவும், போக்குவரத்துப் பிரச்சினை சம்பந்தமாகவும், தனிப்பட்டவர்களிடம் சுகாதாரத் திணைக்களம் ஒட்சிசன் சிலிண்டர்களை ஒப்படைக்க மறுப்பது காரணமாகவும், எமது ஆஸ்பத்திரி சில பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பது உண்மையே. எனினும், இதுவரை சகல சத்திரசிகிச்சைகளையும் வேறுபல முயற்சிகளையும் மேற்கொண்டும் நடத்தக்கூடியதாக இருந்துள்ளது.

> நெருக்கடி நிலையிலும் ஊழியர்கள் ஒத்துழைப்பதே போதனா வைத்தியசாலையின் சீரிய பணிக்குக் காரணம்.

### இரத்தம்

எமது மக்கள் இரத்ததானம் வழங்க முன் வருகிறார்களில்லை என்பது எமக்குக்கவலை தருகிறது. ஒருவர் ஒரு தடவையில் ஒரு பைந்து இரத்தம் வழங்கலாம். ஒரு தடவை இரத்தம் வழங்கிய பின் மூன்று மாத இடைவெளியில் மறு தடவையும் இரத்தம் வழங்க நமது உடல் தயார் நிலையை எய்தும். ஒரு சுகதேகி இரத்ததானம் வழங்குவது கிணற்றில் இருந்து நீர், இறைப்பதைப் போன்றது அவ்வாறு நீர் இறைத்ததும் கிணற்றில் மீண்டும் நீர் சுரக்கிறது அல்லவா? எனவே இது பற்றி யாரும் பயங்கொள்ளத் தேவையில்லை

ஒரு நோயாளருக்கு அவசியமாக இரத்தம் தேவைப்படும் போது அவரது உறவினர்கள் கூட இரத்தம் வழங்க முன் வருகிறார்களில்லை இவ்வாறு அவசியம் ஏற்படும் போது இரத்தம் வழங்காமல், உறவினர்கள் நோயாளர் படுக்கைக்கு அருகில் நின்று கண்ணீர் விடுவதும் அழுவதும் போலித்தனமல்லவா?

## டாக்டர்கள், தாதிமார் பற்றுக்குறை; இரத்ததானம் வழங்க உறவினரே பின்னிற்பு

இருப்பினும் நாம் தொடர்ந்து விடுத்த வேண்டுகோள் காரணமாக அண்மைக்காலங்களில் இரத்ததானம் வழங்குவது தொடர்பாக விழிப்புணர்வு மக்களிடையே ஏற்பட்டிருப்பது மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

இது சம்பந்தமாக நாம் தயாரித்துள்ள வேலைத்திட்டம் நல்ல பயனைத் தருகிறது. மருத்துவத் துறையினர் பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் மத்தியில் சென்று பிரசாரம் செய்கிறார்கள் அதன் பின்னர் நமது நடமாடும் இரத்தவங்கி அவர்களை நாடிச் செல்கிறது. நிறைய இரத்தம் சேகரிக்க முடிகிறது இப்போது. இது நம்பிக்கை தரும் முயற்சியாகும்.

எமது ஆஸ்பத்திரி ஊழியர்கள் அனைவரும் ஆண்டுக்கொரு தடவையேனும் இரத்ததானம் அளிக்கிறார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது

### ஆளணி

வைத்தியர்கள், தாதிகள் பற்றுக்குறை காரணமாக நமது போதனா வைத்தியசாலை மிகவும் பாதிப்படைந்துள்ளது

இவ்விரு துறையினரும் பெருமளவில் வெளிநாடு செல்வதும் இதற்கு முக்கிய காரணமாகும் அத்துடன் மகப்பேற்று மருத்துவத் தாதிமார்களைப் பயிற்றும் வசதிகளும் நிறுத்தப்பட்டுள்ளன

தாதிமார்கள் பற்றுக்குறை உண்டு. வெளி நோயாளர் பகுதிகளைக் கண்காணிக்க இருபத்தியிரண்டு டாக்டர்கள் தேவையாயிருக்க இப்போது எட்டு டாக்டர்களே உள்ளனர். எலும்பு முறிவு சிகிச்சை நிபுணர், நரம்பு, மூளை சத்திர சிகிச்சை நிபுணர், மேக நோய் சிகிச்சை நிபுணர், சட்டவைத்திய அதிகாரி ஆகியோர் நமது வைத்தியசாலையில் சேவைக்கு இல்லை.

### யாழ் ஆஸ்பத்திரி

### எரிபொருள்

எரிபொருள் தட்டுப்பாடும் வைத்தியசாலைகளின் சேவையைப் பாதிக்கிறது உண்மையே யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையைப் பொறுத்தவரையில், கட்டுப்பாட்டு விலைக்குக் கூடுதலான சந்தை விலையில் எரிபொருள் பெற விசேட அனுமதி பெற்றுள்ளோம். ஏனைய வைத்தியசாலைகளும் அவ்வாறு அனுமதி பெற்றுத் தமது அம்புலன்ஸ் சேவையை நடத்துவது பல நோயாளர்களின் உயிர்களைப் பாதுகாக்க உதவும்.

### நோயாளர்கள்

யாழ் மாவட்டத்தில் இன்று பல பகுதிகளில் வைத்திய வசதிகளை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிராம, பிரதேச மட்டங்களில் வைத்திய சேவை பரவலாக்கப்பட்

(6ஆம் பக்கம் பார்க்க)

# பண்டிதமணி: வரலாறும் காலமும்

க. சி. குலரத்தினம்

### பண்டிதமணி கண்ட சைவத்தின் இரண்டாம் கண்!

இற்றைக்கு ஆயிரத்து முந்நூறாண்டுகளுக்கு முன் சைவத்தின் இரண்டு கண்கள் என்று கருதினால், அவை திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரையும் திருநாவுக்கரசுநாயனாரையும் குறித்தனவாகும். அன்றைய சமணர் பௌத்தர் போயகன்றபின், அண்மைக்கால வரலாற்றில் எங்கள் நாட்டுக்கு வந்த வராய புறப்புறச் சமயங்களுக்கும் புறமாய போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போயகல, வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்கப் பெருந் தொண்டு புரிந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் மறுமலர்ச்சிக் காலத்துச் சைவத்தின் முதற்கண். முன்னர் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும் திருநாவுக்கரசுநாயனாரும் ''பொருட் சமயநெறிதான் பெற்ற புண்ணியக் கண்ணிரண்டு'' எனப் போற்றப் பெற்றவர்கள்.

பண்டிதமணி தமது இளமைக்காலத்தில் நாவலர் காவிய பாடசாலை குருகுலக் கல்வி பயின்ற காலத்தில் அதிகாலையில் நித்திரை விட்டெழுந்து தமது காலைக்கடன் செய்வதற்காக நாவலர் பாடசாலையிலிருந்து நீண்ட தூரம் மேற்கு நோக்கி நடந்து போவது வழக்கம். இங்ஙனம் அவர் சென்றபோது சில நாள்களில் பனி என்றும் மழையென்றும் பாராது ஒரு மனிதன் கிழக்கு நோக்கித் தலையில் முக்காடிட்ட வண்ணம் வருவதைக் கண்டிருக்கிறார்.

அந்த மனிதன் கிழக்கு நோக்கி மேலும் நடந்து, நாவலர் பாடசாலையையும் கடந்து கைலாசபிள்ளையார் கோயிலடியில் மனேச்சர் அவர்கள் வீட்டுப் படலைக்கு வெளியே குந்தியிருப்பார். மனேச்சர் அவர்கள் படலையைத்திறக்கும் போதே அந்த மனிதனைக் கண்டு, ''அது யார்? நீங்களா? வாருங்கள்'' என்று முகமன் கூறிவரவேற்பது வழக்கம். மனேச்சர்அவர்கள்பாடசாலைக்கு வரும் போதெல்லாம் அந்த மனிதனும் அவரோடு உரையாடிக் கொண்டே வந்து, பாடசாலையிலும் இருந்து உரையாடி விட்டுப் போவது வழக்கம். இங்ஙனம் வந்து போன அந்த மனிதனுக்கு மனேச்சர் அவர்கள் தகுந்த மரியாதை கொடுப்பதை நன்கு கவனித்த பண்டிதமணி ஒரு நாள், ''அந்த மனிதர் யார்?'' என்று கேட்டார்.

பண்போடும் பணிவோடும் அவர் யாவர் எனக் கேட்ட மாணாக்கன் மீதிரங்கிய மனேச்சர் அவர்கள், ''அவரை நீ அறியாயா? அவருக்குப் பின் அவர்தான்'' என்று சூசகமாகச் சூத்திரம்

## "அவரை நீ அறியாயா? அவருக்குப் பின் அவர்தான்"

போலப் பதில் கூறினர் ''அவருக்குப் பின் அவர் தான்'' என்பதில் முதலில் உள்ள அவர் வேறு யாருமில்லை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களேதான். இரண்டாமிடத்தில் குறிக்கப்பெற்ற அவர்தான் காரை நகரைப்பிறப்பிடமாகக் கொண்ட சங்கரப்பிள்ளை அருணாசலம் என்பவர். அருணாசலம் அவர்கள் மனேச்சர் அவர்களின் மதிப்பில் சைவத்தின் இரண்டாம் கண். ஆறுமுகநாவலர் அவர்கள் தொட்டபணியைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வந்தவர் அந்த அருணாசலம் அவர்கள். அவர் காரைநகரிலிருந்து இரவிரவாக நடந்து வந்து மனேச்சர் அவர்களைக் கலந்தாலோசித்துச் சைவப்பணி புரிந்தவர். சைவாசிரியர்களை உருவாக்குவதற்கு முதலில் ஆரம்பித்தவர்.

அருணாசலம் அவர்களின் தொண்டினை சேர் இராமநாதன், சேர் அருணாசலம், சேர் அம்பலவாணர் கனகசபை, கௌரவ சபாபதி, கௌரவ வைத்திலிங்கம் துரை [illegible] புலவர், சதாசிவஐயர், [illegible] பர், அப்புக்காத்தர் இராசரத்தினம், அப்புக்காத்தர் பாலசிங்கம், புரொக்ரர் கதிரேசர் முதலான சமகாலப் பெரியார்கள் பலரும் பாராட்டியுள்ளார்கள்.

காரைநகரைச் சேர்ந்த களபூமி என்னும் ஊரில் சங்கரப்பிள்ளை பத்தினியம்மாள் தம்பதிகளின் மைந்தனாய் 1864-10-31 ஆம் நாளில் வெள்ளிக்கிழமை பூராட வேளையில் தோன்றிய அருணாசலம் அவ்வூரில் ஐந்தாம் வகுப்புவரை படித்தபின், வண்ணை நாவலர் பாடசாலையில் எட்டாம் வகுப்புவரை பயின்று சித்தி பெற்றபின்,சைவத்துக்கும் தமிழுக்கும் நிலையான தொண்டு செய்வதற்கு விரும்பி ஆசிரியருக்கான பயிற்சி பெற பயிற்சி எடுத்தார். அக்காலத்தில் முதல் [illegible] அமெரிக்க மிசனரிமாரின் போதனா சாலை நிலவியது அதில் பயிற்சி பெறுவதாயின் முதலில் கிறிஸ்தவராக மதம் மாறுதல் வேண்டும். சிலர் அங்கே சேர்ந்த பின் கிறிஸ்தவராக மாறியதும் உண்டு. எவ்வாறாயினும் தராதரப் பத்திரம் பெறுவதற்கு முன் கிறிஸ்தவராகிவிடல் வேண்டும். பயிற்சிக்குப் புகுவதன் முன் புகுமுகப் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும். புகுமுகத் தேர்வுக்கான ஆயத்த வகுப்புகளும் அங்கே நடைபெற்றன.

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட மாணாக்கர் நால்வர் பயிற்சி பெறுவதில் பெருவிருப்பங் கொண்டு, பயிற்சிச்சாலை அமைவுக்கான பனை மரங்களையும் காரைநகரிலிருந்து கொண்டு சென்றனர், சிரமதானமும் செய்தனர். அவர்களுள் சந்தப்பர் சுப்பிரமணியர் அம்பலவாணர் என்பார் ஒருவர். ஐ. சுப்பிரமணியம் என்பார் இன்னொருவர். மு. குமாரவேலு என்பார் மூன்றமவர். சங்கரப்பிள்ளை அருணாசலம் நான்காமவர்.

இவர்களை விட குமாரவேலு, கதிரேசபிள்ளை என்னும் இருவர் மந்துவில் முதலான இடங்களிலிருந்துவந்திருந்தார்கள். புகுமுக வகுப்பு, புகுமுகத் தேர்வு, பயிற்சிச்சாலைப் பிரவேசம் யாவும் வெற்றிகரமாக நிகழ்ந்து வந்த காலக்கிரமத்தில், அருணாசலம், குமாரவேலு, கதிரேசபிள்ளை ஆகியோர் மதம் மாற்றமடைவதைப் பின் போட்டு வந்தனர். சுந்தப்பர் சுப்பிரமணியர் அம்பலவாணர் என்பார் அலன் ஏபிரகாம் எனப் பூண்டு மதம் மாறிக் கொண்டார். அவரே 1910 ஆம் ஆண்டில் வால்வெள்ளியின் விருத்தாந்தங்களை விவரமாக அறிவித்து அகில உலகத்தையும் அதிசயிக்கச் செய்து, இராசாங்க வானியற் கழகக் கௌரவ அங்கத்தவராய் F.R.A.S பட்டமும் பெற்றுப் புகழும் பெற்றவர்.

இறுதிப் பரீட்சைவரை

6ஆம் பக்கம் பார்க்க)

## எமதர்மனும் சித்ரகுப்தனும்

எமதர்மர்:- சித்ரகுப்தா, நானும் கவனித்துக்கொண்டு வருகிறேன். கொஞ்சக் காலமாக மனிதர்களின் உயிரைக் கவர்ந்து வர நான் புறப்படும் சமயம் எனது எருமை வாகனம் எனக்கு முன் வேகமாகவும் சுறுசுறுப்பாகவும் உற்சாகமாகவும் காணப்படுகிறது. இது ஏன் என்று விளங்கவில்லை? உனக்குத் தெரிந்தால் சொல்.

சித்ரகுப்தன்:- முன்பே உங்களிடம் இதுபற்றிக் கூறவேண்டுமென்றுதான் நானும் நினைத்தேன் ஆனால் 'எல்லாம் எனக்குத் தெரியும். உன் வேலையைப் பார்' என்று கோபித்துக் கொள்வீர்களேஎன்றுநான் தயங்கினேன். பூலோகத்தில் சமீபகாலமாக பசுக்குலத்தைச் சிறிதும் சிறிதும் ஈவிரக்கமின்றி பணப்பேராசையால் கொன்று புலாலை விற்கிறார்கள். வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கிறார்கள். இந்தக் கொலை பாதகச் செயலை எதிர்த்துப் பேசியவர்கள் உண்ணாவிரதமும் மறியல் சத்தியாக்கிரகமும் எடுக்கப் பெரு முயற்சி செய்து வருகிறார்கள் ஆயினும் பசுக்களும் மாடுகளும் வெட்டப்படுவது இன்னும் நின்ற

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளித் திரை

# சென்னை ஓட்டப் பந்தயத்தில் நடிகை இளவரசியும் ஓடினார்

## ரசிகர்கள் தொட்டு மகிழ்ந்தனர்

ஆபிரிக்காவில் வறுமையில் வாடும் குழந்தைகளுக்கு உதவுமுகமாக நிதி திரட்டுவதற்காக சென்னையில் ஓட்டப்பந்தயம் நடைபெற்றது.

அதில் நடிகர்கள் சிவாஜி கணேசன், கமலஹாசன், தியாகராஜன், கார்த்திக், வி. கோபாலகிருஷ்ணன், நடிகைகள் இளவரசி, 'டிஸ்கோ' சாந்தி, சிலுக்கு ஸ்மிதா, சாதனா, மனோரமா, காஞ்சனா, ஜெய்சித்ரா ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

இந்தியாவில் சென்னை உட்பட பதினேழு இடங்களில் ஓட்டம் இடம் பெற்றது. சென்னையில் நடந்த ஓட்டத்தில் 15 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர்.

இது பற்றி நடிகை இளவரசி சொல்கிறார்:

"ஓடுவது என்றால் எனக்கு மிகவும் விருப்பம்.

அதுவும் வறுமையால் வாடும் ஆபிரிக்க நாட்டு குழந்தைகளுக்கு உதவ நிதி சேர்க்க ஓட வேண்டும் என்றதும் மகிழ்ச்சியுடன் சம்மதித்தேன்.

குறிப்பிட்ட அன்று ஓட்டம் ஆரம்பமாகும் இடத்திற்குக் காரில் சென்றடைந்தேன். காரில் இருந்து இறங்கியதும் ரசிகர்கள் சூழ்ந்து கொண்டார்கள். சிலர் உற்சாகத்தில் கைகுலுக்கினார்கள்.

எல்லோரும் ஓடத் தொடங்கினோம்.

ரசிகர்கள் உற்சாக மிகுதியால், என்னைத் தொட்டுப்பார்க்கத் தொடங்கிவிட்டார்கள். சிலர் என் மீது உரசுவதும் சாய்வதுமாக ஓடினார்கள்.

இந்த தர்மசங்கடமான நேரத்தில் பொலிஸார் எனக்கு உதவினார்கள். எவ்வளவு தூரம் தான் பொலீஸ் பாதுகாப்புடன் ஓடமுடியும். இரண்டு கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்ததும் எனக்கே அலுப்பு ஏற்பட்டுவிட்டது.

ஓட்டத்தில் இருந்து ஒதுங்கிக்கொண்டேன்.

ஒரு நல்ல பணிக்காக ஓடியது எனக்கு மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் இருந்தது.

ரசிகர்கள் தொல்லை கொடுத்திருக்காவிட்டால், பத்துக் கிலோ மீற்றர் தூரமும் ஓடியிருப்பேன்.

இதுபோன்ற நல்ல காரியத்துக்காக - என்ன தியாகம் செய்யவும் நான் தயார்''.

இப்படி சொன்னார் நடிகை இளவரசி.

### ஈழத் தமிழ்ப் பெண்ணுக்கு உதவினார் ஜீவிதா



உடைமைகளை இழந்த நிலையில் தமிழ்நாட்டுக்குப் புகலிடம் தேடிச் சென்ற சுஜாந்திக்கு நடிகை ஜீவிதா உதவியுள்ளார்.

சுஜாந்தியை அவரது சிகை அலங்கார நிபுணராக வைத்துக் கொண்டுள்ளார் ஜீவிதா.

சுஜாந்தி இலங்கைத் தமிழ்ப்பெண். செல்வந்த குடும்பத்தைச் சேர்ந்த அவர் சொந்த வீட்டையும் இழந்த நிலையில் குடும்பத்துடன் தமிழ்நாடு சென்றார்.

சுஜாந்திக்கு வீட்டு அலங்காரம், 'டிசைன்' போடுவது, வர்ணம் தீட்டுவது, சிகை அலங்காரம் செய்வது போன்றவைகளில் நல்ல திறமை உண்டு.

ஆதரவற்ற தனது குடும்பத்தைக் காப்பாற்ற நடிகை ஜீவிதாவை அணுகினார் சுஜாந்தி.

அவரது துயரக் கதையையும், தொழில் திறமையையும் அறிந்த ஜீவிதா அந்த வாய்ப்பைக் கொடுத்தார்.

இது பற்றி ஜீவிதா கூறுகையில்,

'சுஜாந்தி ஈழத் தமிழ்ப் பெண். அவரைப் போன்றவர்களுக்கு ஏதாவது ஒருவகையில் உதவுவது தமிழ் நாட்டு மக்களின் கடமை.

அதனாலேயே அவரை எனது சிகை அலங்கார நிபுணராக வைத்துக் கொண்டேன்' என்றார்.

# தமிழ்த்திரையில் ஊதியம் அதிகம்

## வடக்கில் அமிதாப் பெறுவதை எமக்கும் தருவார்களா?

### கமல் பேட்டி



இரும்பைப் புசித்து ஏப்பம் விடும் திட்பத்தோடு—

எந்தச் சுழிக்காற்றுக்கு நடுவிலேயும் நின்று ஊசியில் நூல் கோர்க்கும் நுட்பத்தோடு—

சிந்தனையே இமைகளின் சிறகுகளாகப் படபடக்க; பதில்களைப் பார்வையாலேயே எழுதும் சுறுசுறுப்புடன் உலவிக்கொண்டிருப்பவர் நடிகர் கமலஹாசன்.

சாட்சாத் - இவர் பல புரளிகளுக்குள் பட்டு உழலும் - கமலஹாசன் தானா?

அதே கமலஹாசன் தான்.

ஆச்சரியமே வேண்டாம்.

இதோ அவருடன் ஒரு சந்திப்பு.

வணக்கம் கமல்! இப்பொழுதெல்லாம் நீங்கள் அதிகமாக இந்திப் படவுலகில் காணப்படவில்லையே ஏன்?

'அதுக்கு ஒரே காரணம்! நான் நியாயமா இங்கே வாங்கற சம்பளத்தை அங்கே வாங்க முடியலே. அவுங்களாலும் குடுக்க முடியலே. அமிர்தாப்புக்குக் குடுக்கிற சப்பளத்தை எனக்குக் குடுக்கணும்னு கேட்கிறதும் நியாயமில்லை. எனக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான சம்பளம் கிடைக்கலேன்னா எப்படி அங்கே அதிகமாக நடிக்க முடியும்னு நினைக்கிறீங்க?

கட்டுப்படியாகவில்லை என்றால் நீரை விற்கின்றவர்கள் கூட கூடையைத் தூக்கிக்கொண்டு அடுத்த தெருவுக்குள் போகலாம்.

இது வியாபார உலகம்! இங்கே பேரங்கள் நேரங்களைப் பொறுத்துத் தான்!

'... ஆனாலும் தமிழ் சினிமாவிற்கு தாங்கள் திரும்பி வந்த பிறகு நடித்த படங்களில் பெரும்பாலானவை வர்த்தக ரீதியில் வெற்றி பெறவில்லையே?'

'அது என்னை வைத்துப் படம் எடுத்தவர்களின் கணிப்பிலும் - ஏன் - என்னுடைய கணிப்பிலும் ஏற்பட்ட தவறாகக் கூட இருக்கலாம். சில நேரங்களில் சில அனுமானங்களை ஜெயிக்க முடியாமல் போய் விடுகிறது. அது எல்லோருக்கும் ஏற்படக் கூடியது தான்.

அதனால்தான் தாங்கக் கூடிய பெரிய தயாரிப்பாளர்களின் படங்களில் மட்டுமே நடிப்பது என்று தீர்மானித்துக் கொண்டீர்களா?'

பெரியதயாரிப்பாளர் - சின்னத் தயாரிப்பாளர் என்றெல்லாம் சொல்வது பிரமைதான். ராஜ் கண்ணு, பதினறு வயதினிலே எடுக்கும்போது சின்னத்தயாரிப்பாளர். அவருக்கு வெற்றிகள் சேரச் சேர அவரே பெரிய தயாரிப்பாளர் ஆகவில்லையா? அதே போலத்தான் ஏவிஎம்நிறுவனத்திற்கு ஒரு படம் ஒப்புக்கொண்டுள்ளேன். அத்துடன் அங்கே வேலை பார்த்த ஊழியர் ஒருவருக்கும் சம்மதித்துள்ளேன்'

தயாரிப்பு: பேரின்பம்

### ரேவதியின் வாய்ப்புக்கள்

### நடிகை நதியாவிடமா?

ரேவதி படங்களில் நடிப்பதைக் குறைத்துக் கொண்டு வருவதால்



நதியாவின் "மார்க்கட்" இன்னும் ஏறிக்கொண்டு வருவதாக சினிமா வட்டாரங்களில் பேசப்படுகிறது.

இது பற்றி நதியா சொல்கிறார்:

ரேவதி படங்களில் நடிப்பதைக் குறைத்துக் கொண்டுள்ளதால் அவரது வாய்ப்புகள் என்னைத் தேடி வருவதாக எல்லோரும் சொல்கின்றார்கள். இது தவறு.

நான் ரேவதி நடித்துக் கொண்டு இருக்கும் போதே, நடிப்பில் ஒரு நல்ல நிலையைப் பிடித்துக் கொண்டு விட்டேன். அவரைப் போலவே நானும் பெரிய, பெரிய கம்பெனி படங்களிலும் நடித்துள்ளேன்.

அதனால் அவருடைய படங்களில் நான் நடிக்கிறேன் என்பது தவறு.

நான் எனது தனித்தன்மையில் நிற்கவே விரும்புகிறேன்.

அதுபோல் அடுத்தவர்



வாய்ப்பைத் தட்டிப் பறிக்க வேண்டிய நிலையிலும் நான் இல்லை'' என்றார்.

### தேவிஸ்ரீக்கு அடித்தது சான்ஸ்

நடிகை தேவிஸ்ரீக்கு அதிஷ்டம் அடித்திருக்கிறது. அப்படி என்ன அதிஷ்டம்.?

'மயூரி' படத்தைத் தயாரித்த பிரபல தெலுங்குப் படத் தயாரிப்பாளரான ராமோஜிராவின் புதிய படத்தின் நாயகியாக தேவிஸ்ரீ ஒப்பந்தம் ஆகியுள்ளார்.

அவர் [illegible] சாரிகா என்று மாற்றப் பட்டு இருக்கிறது.

# தாய்மை அடைந்த பெண்களுக்கு உகந்த சில ஆலோசனைகள்

கர்ப்பவதியான பெண்கள் தங்கள் உடலில் அக்கறை காட்ட வேண்டும். இல்லையேல் பிரசவகாலத்தில் மிகவும் கஷ்டப்பட வேண்டி வரும். குறிப்பாக தலைப் பிரசவத்தை எதிர்பார்க்கும் பெண்கள் வைத்தியர்களின் ஆலோசனையை அடிக்கடி பெற்று அதன்படி நடக்க வேண்டும்.

ஒரு பெண் திருமணம் செய்து ஒரு மாத காலத்திலோ அல்லது இரு மாத காலத்திலோ கருத்தரிக்கலாம். மாதவிடாய் நின்று விட்டது என்றால் அவள் கருத்தரித்து விட்டாள் என்பதற்கு அறிகுறியாகும். கருத்தரித்த காலத்திலிருந்து கர்ப்பவதிகள் தினமும் சத்துள்ள உணவுகளை உட்கொள்ள வேண்டும்.

முதல் மூன்று மாதங்கள் வரை ஒரே சோம்பலைக் கொடுக்கும். அடிக்கடி படுக்க வேண்டும் போல் இருக்கும். மிகவும் பலவீனம் உள்ள பெண்களுக்கு அடிக்கடி மயக்கமும் ஏற்படலாம். இக்காலங்களில் கர்ப்பவதிகள் மிகவும் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும். அதிக தூரம் நடந்து செல்லவோ அல்லது கடினமான வேலைகள் ஏதும் செய்யவோ கூடாது. அப்படி உடலை ஆட்டி கடின வேலை செய்வதால் சில சமயங்களில் கர்ப்பச்சிதைவுகள் ஏற்படக்கூடும். நன்றாக ஓய்வு எடுத்துக் கொள்வது மிகவும் நல்லது.

வழமையாக சாப்பிடும் சோறு போன்ற உணவுகளில் அதிகம் விருப்பம் வராது. புது விதமான ருசியைக் கொடுக்கும் உணவு வகைகளை சாப்பிடுவதற்கு விருப்பமாக இருக்கும். இதனல் அனேகமான பெண்கள் மாங்காய்களையும் புளியம்பழங்களையும் அனேகமாக விரும்பிச் சாப்பிடுவார்கள். இதன் காரணமாகவும் கர்ப்பத்தில் ஏற்பட்ட மாற்றத்தினலும் இவர்கள் அடிக்கடி வாந்தி எடுப்பார்கள். இக்காலங்களில் இவர்கள் சாப்பிடும் உணவுகள் சமிபாடடைவது குறைவாகவே காணப்படுகிறது. ஆகவே அடிக்கடி வாந்தி எடுக்கும் பெண்கள் பிளேன் சோடாவுடன் குழுக்கோஸ் இரண்டு தேக்கரண்டி கலந்து அருந்த வேண்டும். இப்படி செய்வதன் மூலம் வாந்தி எடுப்பதை சிறிது குறைத்துக் கொள்ளலாம் ஏற்கனவே உடல் பலவீனம் உள்ள பெண்கள் அடிக்கடி வாந்தி எடுப்பதால் இவர்கள் உடல் மிகவும் பாதிக்கப்படும். அப்படிப் பாதிப்படையும் நிலை வந்துவிட்டால் உடனே அவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று அங்கு சிகிச்சை அளிக்க வேண்டும். ஆரோக்கியமான பெண்கள் ஓரளவுக்குச் சமாளித்து விடுவார்கள். நான்கு ஐந்து ஆறு மாதங்கள் கழிந்த பின்பு வயிறு சற்றுப்பெரிதாகத் தோற்றமளிக்கும். கர்ப்பப்பைக்குள் குழந்தை ஓரளவுக்கு அசையும் அறிகுறி இவர்களுக்குத் தென்படும். மூச்சு விடுவதற்கு சற்று கஷ்டமாக இருக்கும். ஏதோ ஒரு பாரமான பொருளை வயிறு சுமந்து கொண்டு இருப்பது போல் இருக்கும். மாதங்கள் செல்லச் செல்ல வாந்தி எடுப்பதும் சற்றுக் குறைவாகக் காணப்படும். வாந்தி எடுப்பது நின்று விட்டதும் நன்றாகச் சாப்பிடுவதில் அதிக நாட்டம் கொள்வார்கள். மரக்கறி வகைகள், மீன், இறைச்சி, பருப்பு, பால் போன்ற சத்துள்ள உணவுகளைச் சாப்பிட்டு வருவதால் குழந்தையும் நன்கு வளர்ச்சி அடைவதோடு தாயானவரும் ஆரோக்கியமான உடல் வளர்ச்சி உடையவளாகக் காணப்படுகின்றாள்.

கர்ப்பவதியான பெண்கள் உடல் வளர்ச்சியை மட்டும் பெற்றால் போதாது, சுத்தமாகவும் சுகாதாரமாகவும் இருக்க வேண்டும். தினமும் குளிர்ந்த நீரில் குளிப்பது நன்று. நன்கு எண்ணெய் வைத்து கிழமைக்கு ஒரு தடவை முழுக வேண்டும். ஒன்று விட்டு ஒரு நாளைக்கு நல்லெண்ணெய் தலைக்குத் தடவ வேண்டும். குளிர்காலங்களில் இவைகளை ஓரளவு குறைத்துக் கொள்ளலாம்.

மாலை நேரங்களில் சிறிது தூரம் நடந்து திரியலாம். பின்பு இரவு உணவை முடித்துக் கொண்டபின் படுக்கைக்குச் செல்லும் போது ஒரு கிளாஸ் பால் அருந்துவது நல்லது.

படுக்கை அறையில் நெடுநேரம் நித்திரை விழித்து புத்தகங்கள் வாசிப்பதோ அல்லது கணவருடன் களிப்புற்று இருப்பதோ உகந்ததல்ல.

இந்த விடயங்களில் கணவர் மனைவிக்கு ஒத்துழைப்பாகவும் அனுசரணையாகவும் நடந்து கொள்ள வேண்டும். ✱

திருமதி ஸ்ரீரங்கராணி இராமச்சந்திரன்

நங்கை

## பெண்மணிகள் பற்றி பொன் மொழிகள்

✱ குணமுள்ள பெண் ஒருவனின் கருத்தில் ஒளி வீசுகிறாள். புத்திசாலியான பெண் ஒருவனின் கவனத்தைக் கவருகிறாள். ஆனால் பரிவும், பாசமுமுள்ள பெண்ணே அவனை சுவீகரித்துக் கொள்கிறாள்.

- அரிஸ்டாட்டில் -

✱ பெண்களின் இரண்டு சொட்டுக் கண்ணீர் நூறு சொற்களை விட வலிமையானது

- காண்டேகர் -

✱ ஒரு பெண்ணைக் கட்டியாளும் மனிதனால் ஒரு தேசத்தைக் கட்டியாள முடியும்.

- பால்சாக் -

✱ கற்பு நெறியில் தன்னையும் காத்துக் கொண்டு தன் கணவனையும் காப்பாற்றி தகுதியுடைய புகழையும் காத்து உறுதி தளராமல் வாழ்கின்றவளே பெண்.

-- திருவள்ளுவர்

தொகுப்பு: மாவையூர் ஜெயா ஞானசுந்தரம்.,

# குழந்தைகளுக்கு குதூகல உலகம் படைத்த கலைஞர் வால்ட் டிஸ்னி

ஆங்கிலேயச் சிறுவர்களுக்கு வால்ட் டிஸ்னியின் படம் தொலைக்காட்சியில் ஒளிபரப்புகின்றார்கள் என்றால் ஒரே குதூகலம். வால்ட் டிஸ்னி என்ற ஆங்கிலேயர் சிறுவர்களின் இதய தீபமாக விளங்கி வந்தார். இதற்கு காரணம் அவர் சிறுவர்கட்கு மகிழ்ச்சியூட்டும் வகையில் படங்களையும் சிறுவர்களுக்கேற்ற பூங்காக்களையும் அமைத்தமையேயாகும்.

1923ல் படங்கள் எடுக்க ஆரம்பித்த இவர் தனது வாழ்நாளில் 600 படங்களை தயாரித்தார். இவர் முதன் முதல் கேலிச்சித்திரம் என்னும் காட்டூன் படங்களை முழு நீளமாக எடுத்தவராவர். அதன்படி இவர் எடுத்த முதற் காட்டூன் படம் 'தங்க அழகி' என்பது. இப்படத்தை எடுக்க அவர் 50,000 படங்களை வரைந்தார். இப்படத்தை எடுக்க அவருக்கு 7 ஆண்டுகள் சென்றதாம்.

இவரது காட்டூன் படங்களில் சிறுவர்களில் விரும்பும் காட்டூன் நட்சத்திரங்கள் எவை தெரியுமா? டொனல்டக் என்ற விசித்திர உருவமைப்பு வாத்தும், மிக்கி மவுஸ் என்னும் விசித்திர உருவமைப்பான எலியுமேயாகும். இந்நட்சத்திரங்களின் படம் என்றால் சிறுவர்களுக்கு ஒரே கொண்டாட்டம்தான்

ஞாபக மறதிப் பேராசிரியர் காட்டுப்பூனை வாழும் பாலைவனம், கடலுக்கடியில் 2000 மைல் போன்ற படங்கள் இவரின் செல்வாக்குள்ள தயாரிப்புகள்.

முதன் முதல் வர்ணப் படம் எடுத்தவரும் இவரே. ஸ்னோவைட்டும் ஏழுசுள்ளர்களும் என்ற காட்டூன் படமே அது.

சிறுவர் சுடர்

இப்படம் 1933ல் எடுக்கப்பட்டதாகும்.

குழந்தைகளுக்காக இவர் அமைத்த டிஸ்னிலான்ட் (Disny land) உலக அதிசயங்களில் வைக்கத்தக்க ஓர் அற்புத உலகமாகும். இதற்காக தனது சொத்தில் 60 ஏக்கர் நிலத்தைபயன்படுத்தினார். இவரது பெரு முயற்சியை குருசேவ், நேரு போன்ற தலைவர்கள் வெகுவாக பாராட்டினார்கள்.

இப்படிப்பட்ட குழந்தைகளின் இதய தீபமான வால்ட்டிஸ்னிக்கு மரணகாலம் அண்மித்தது. ஆம் அவரது இடது நுரையீரலில் புண் ஏற்பட்டதால் அந் நுரையீரல் நீக்கப்பட்டது. 1980 ல் டிசம்பர் 15 ல் மாரடைப்பால் வால்ட் டிஸ்னி இயற்கை எய்தினார். உலக சிறுவர்களின் இதயதீபமான வால்ட் டிஸ்னியின் படங்கள் இன்றும் அவரது திறமைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன

தி. தவபாலன்
நல்லூர்.

## கேள்வியும் பதிலும்

தொகுப்பு: சிவதர்ஜினி

### கேள்வி

1. சேர் ஐசாக் நியூட்டன் எத்தனையாம் வயதில் பட்டதாரியானார்?
2. உலகப்புகழ் பெற்ற சித்திரம் யாரால் வரையப் பட்டது?
3. வலங்கைமான் சண்முகசுந்தரம் எத்துறையில் பிரபலமானவர்?
4. பித்தப்பை இல்லாத விலங்கு எது?
5. கோள்களில் மிகப் பெரியது எது?
6. மடக்கை வாய்ப்பாட்டைக் கண்டு பிடித்தவர் யார்?
7. ஐம்பெருங் காப்பியங்கள் எவை?
8. ஆமையின் சீவியக் காலம் எத்தனை ஆண்டுகள்?
9. டைனமைற்றைக் கண்டு பிடித்தவர் யார்?
10. யப்பானிய நாணயத்தின் பெயர் என்ன?
11. ஸ்பெயின் தேசத்துத் தலைநகரின் பெயர் என்ன?
12. மக்பெத் என்னும் நாடகத்தின் ஆசிரியர் யார்?

### பதில்

1. 24 வயதில்.
2. எட்வேன்.
3. நாதஸ்வரத்துறையில்
4. எலி.
5. வியாழன்.
6. [illegible]
7. மணிமேகலை, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசிய.
8. நூறு வருடங்கள்.
9. நோபல்.
10. ஜென்.
11. மட்றிட்.
12. சேக்ஸ்பியர்.

## விடுகதையும் விடையும்

(1) கால் உண்டு:
விரல் இல்லை
முதுகு உண்டு:
தலை இல்லை
கை உண்டு:
விரல் இல்லை!
அது என்ன?

(2) நெடுங்காலம் வாழ
நெருப்பில் குதிப்பான்!
அவன் யார்?

(3) காட்டிலும் மேட்டிலும் வளர்ந்தவன்
கடும் வெயிலில்
சிரிப்பான்!
அவன் யார்?

(4) பருவக் காலத்திலே பாட்டுக் கச்சேரி! அது என்ன?

(5) பொங்கும் குளத்தில் புதுப் பெண் குளிப்பாள் அவள் யார்?

விடைகள்:

1. நாற்காலி 2. செங்கல் 3. பருத்தி 4. தவளை 5. அப்பளம்.

எஸ். அருண்குமார்
வருடம் 10
வைத்தீஸ்வரா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவினுக்கு அருங்கலமான நமச்சிவாய மெய்ப்பொருள்

(சென்றவாரத் தொடர்)

எங்கும் நிறைந்திருக்கிற சிவத்தை நினைப்பதற்கு ஒருவழி சிவலிங்கம் வைத்துத் தினமும் பூசை செய்து வருதலாகும். சிவத்திற்குச் செய்யும் பூசை சிவபூசை எனப்படும். சிவத்தை உள்ளத்தில் இருத்தித் தியானம் செய்தால் அது சிவத்தியானம் எனப்படும்.

'புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு' என்பது திருமூலர் வாக்கு. இறைவனை அடைவதற்கு மிக இலகுவான வழியை நமக்குத் திருமூலர் காட்டுகின்றார். நீரினால் அபிஷேகம் செய்து பூவினால் அர்ச்சிக்கும்போது இறைவன் மகிழ்வோடும் அச்சிவபூசையை ஏற்றுக் கொள்ளுகின்றான். இதைக் கூடச் செய்ய முடியாமல் மானிடஜென்மம் துன்பம் அடைகின்றது.

## சினம் அடங்கி சிந்தை கனியும்போது ஞானநாயகன் தானே வெளிப்படுவான்

நாம் சுவாசிக்கும் காற்று, நாம் குடிக்கும் தண்ணீர், நாம் உண்ணும் உணவு ஆகியவை அத்தனையும் நாம் இறைவனிடம் பெற்ற கடன்கள் இக்கடனை நாம் தீர்க்க வேண்டாமா? அன்றாடம் கடனை அன்றாடு தீர்த்துக் கொண்டால் நமது வாழ்க்கையும் வளம்பெறும். இக்கடனைப் பிரார்த்தனை ஒன்றினாலே தான் தீர்க்க முடியும். இரவு முழுவதும் பட்ட கடனை காலைப் பிரார்த்தனையாலும், பகல் முழுவதும் பட்ட கடனை மாலைப் பிரார்த்தனையாலும் நீக்க முடியும் இது கருதியே காலைக்கடன், மாலைக் கடன் என்ற சொற்பிரயோகம் ஏற்பட்டது.

சிவபூசை ஒழுங்காக மனத்தோடு பொருந்தச் செய்தால் மனோலயம் ஏற்படும். மனோலயம் தியானமாக மாறுவதற்கு அன்போடு ஐந்தெழுத்தை தியானிக்க வேண்டும். இறைவனைப் பற்றிய இடைவிடாத நினைவே தியானம் எனப்படும். உயரமான இடத்திலிருந்து எண்ணெயை ஒழுக விட்டால் அது கம்பிபோல இடையறாது ஒழுகிக்கொண்டே இருக்கும். அது போலவே மனமும் இடையறாது இறைவனடியிணையைப் பற்ற வேண்டும். அதற்கு இலகுவான வழி நமசிவாய மந்திர ஜெபமாகும். மந்திரம் வேறு இறைவன் வேறு அல்ல மந்திரமும் இறைவனும் ஒன்றே. காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க ஓத வேண்டும். நான்கு வேதங்களுக்கும் நடுநாயகமாகவும் மெய்ப்பொருளாகவும் விளங்குவது நமச்சிவாய மந்திரமாகும்.

நல்ல விளக்காகவும், நாவினுக்கருங்கலமாகவும், வேதம் நான்கினும் மெய்ப்பொருளாகவும், நல்ல வழியைக்காட்டுவதாகவும், மந்திரமாக மாத்திரமல்ல, இறைவனுடைய நாமமாகவும் விளங்குவது நமச்சிவாய மந்திரமாகும்.

இத்தகைய சாதனைகள் எல்லாம் செய்து வந்தால் கோபம் தானாகவே நீங்கும். ஆறுவது சினம் என்று ஔவையார் கூறியதும் இதனையே. கோபம் பாவத்தைத் தேடும் என்பார்கள். பொதுவாகக் கோபம் யாருக்குமே கூடாது. தனது கோபம் செல்லக் கூடிய இடத்தில் செலுத்தி விடாமல் கோபத்தை அடக்குகிறவன்தான் அதை அடக்கினவனாவான் தன்னைக் காட்டிலும் பலம் குறைந்தவனிடத்தில்தான் தன்னுடைய சினம் செல்லும்; தன்னைக் காட்டிலும் பலம் மிகுந்தவனிடத்திலும் சமானமானவனிடத்திலும் செலுத்த முடியாது. தன்னுடைய கோபத்தைச் செலுத்தக் கூடாத இடத்தில் செலுத்தி விட்டால் தனக்குத் தீமை உண்டாகும். செலுத்தி முடிந்த இடத்தல் செலுத்தினால் அதைக் காட்டிலும் தீமை உண்டாக்குவது வேறொன்றுமில்லை யாரிடத்திலும் கோபம் செலுத்துவதை விட்டுவிட வேண்டும். ஏனெனில் தீமைகள் உண்டாகக் கூடிய காரணங்கள் கோபிப்பதால் உண்டாகும் சேர்ந்தவர்களைக் கொன்றுவிடக் கூடிய கோபம், ஒருவனுக்கு அபாயகாலத்தில் பாதுகாப்பாக இருக்கக் கூடிய துணைவர்களையும் கடிந்து புண்படுத்தி விலக்கிவிடும். முகம் மலர்ந்து சிரிப்பதையும் அகம் மகிழ்ந்து சந்தோஷப்படுவதையும் அழித்து விடுகிற கோபத்தைக் காட்டிலும் பகைவன் வேறுயாருமில்லை. ஒருவன் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ள விரும்பினால் மனதில் கோபம் உதிக்கும்போது விடவேண்டும். அடக்கா உடனே அதனை அடக்கி விட்டால் அக்கோபம் தனக்கே அழிவு செய்யும். மனதில் கோபத்துக்கு இடங்கொடுக்காதவன் விரும்பியதை எல்லாம் உடனே அடைவான்.

இறைவனைக் காட்டும் கண்ணாடிகள் மூன்று. கோயில்களில் இருக்கும் திரு உருவங்கள்; திரு உருவங்களைக் குறிக்கும் மந்திரங்கள்; அருளாளரால் பாடப்பெற்ற திருமுறைப் பாடல்கள். இவை எவற்றின் மூலமும் ஒருவன் பக்தி செய்து கடவுள் தரிசனத்தைப் பெறலாம் வேண்டியது முயற்சியும் நம்பிக்கையும்

திருமுறைப் பாடல்களைப் பொருள் உணர்ந்து பாடும்போது அத்திருமுறைக்குள் இறைவனையே காண்கின்றோம் குனித்த புருவம், கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பு, பனித்த சடை, பவளம்போல் மேனியில் பால் வெண்ணீறு இனித்தமுடைய எடுத்த பொற்பாதம் என்னும்போது அத் தேவாரத்தினுள்ளே நடராசப் பெருமானைப் பார்க்கின்றோம். திருவடியும், தண்டையும். சிலம்பும், சிலம்பூடுருவப்பொரு வடிவேலும், கடம்பும், தடம்புய மாறிரண்டும், மருவடிவான வதனங்களாறும் மலர்க்கண்களும் என்னும்போது முருகப்பெருமானை அப்பாடலுள் காண்கின்றோம்

திரு என்பதற்குக் கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம் என்று நச்சினார்க்கினியர் பொருள் கூறுவார் முறை என்றால் நூல் என்பது பொருள். திரு என்பது இறைவனையும் குறிக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஆத்மஜோதி நா. முத்தையா

---

## (இருமாதக்குறுநாவல்)




## (அத்தியாயம் - 08)

எடுபிடியோடு சம்சாரிக்க வந்த இவன் - இந்தத் துரை முன் பின் பழக்கமில்லாத ஓர் அந்நியப் பெண்ணோடு நீண்டகால உறவு பூண்டவன் போல் சிரித்த போது, அந்தச் சிரிப்பில் ஏதோ ஒரு 'விஷமம்' இருப் தாகவே அவள் யூகித்தாள். ஆனால், தன்னை அது ஆகர்ஷிக்காத பாவனையில் நடித்து அவன் எதிர்பார்த்து எதற்காக வந்தானோ அதற்காக - அந்த விஷயத்தை நினைவு கூரும்படியாக அவனுக்கு ஒரு ஆவலைத் தூண்டும் பொருட்டுத் தன்னுள் ஒரு கோலங்கொண்டு அவன் எதிரே, ஒரு கட்டிய புருஷனைப் பார்க்கிற கூச்சமற்ற கனிவோடு பூவிரித்த இதழாகச் சிரித்து நின்றாள்.

துரையோ அப்பவும் அதே திகைப்பில் இதயம் நைந்து போயிருப்பதைக் கவனித்த இவள், குழந்தைகளுக்குத், தாயான ஒருத்தியைச் சம்பவிக்க எந்தவோர், ஆடவனுக்கும் ஓரே வாக்கில் மனசு ஏவாது' என்ற உடற்கூற்றினடியாகவும் உளவியல் ரீதியாகவும் இறங்கிய போது, திடீரென்று சுளுவான ஒரு யோசனை அவளுக்கு உதித்தது.

அதை அவள் சம்பிரதாயத்துக்சேனும் ஒஞ்சிக்காமல் உரிந்த மேனியாகவே சொன்னாள்:

'சேர், நீங்க சல்லியைப்பற்றி யோசிக்கிறீங்களாக்கும். அதெல்லாம் அப்புடி ஒண்ணும் பெரிய தொகையில்ல.. அஞ்சு ஆறு ரூபாக் குடுத்தாப் போதும்...'

'பச்சை உண்மைகள் அசிங்கமாக வெளிவந்தாலும் அவற்றைத் தெளிவுபடுத்தும் நெஞ்சு பரிசுத்தமானது' என்பது அவன் வாகடம். ஆதலால், அவளின் அந்தப் பச்சையான வெளிப்பாட்டில் அவன் அசூசைப்பட்டதாகத் தெரியவில்லை; அவதிப்படுகிற வனாகவும் தெரியவில்லை.

அவள் வார்த்தைக்கு - அதை எடுத்துக் கூறிய துணிச்சலான நேர்மைக்கு அவன் அப்படி அர்த்தம் கொண்டானேயன்றி, அவள் கேட்டதற்கு ஒப்பவோ மறுக்கவோ முடியாமல் மௌனமாகவே இருந்தான்.

துரையின் மௌனம் சற்றுவேளை அவளின் மனசைச் சிப்பிலியாட்டிற்று.

அப்போது திடீரெனக் கீச்சிட்ட குழந்தையின் கேருங்குரல் அவளின் அந்தரித்த சூழலைக் குழப்பி விட்டது. இருந்தும், அவள் அதனைக் காண்பியாமல் திரும்பிச் சென்று குழந்தையை வெளியே தூக்கிவரும் போது சொன்னாள்:

'தொரே, சத்தைக்குப் பொறுங்கோ. இதோ குடுத்திட்டு வந்துடறேன்'

துரை அப்பவும் அசையாமல் ஊமையாகவே இருந்தார்.

நாழிகை ஆயிற்று.

குழந்தை வேறு கை மாறிப்போன திசையை இவன் கவனிக்கவே இல்லை. ஆனால், அது வீரிட்டுக் கத்திய குரல் மட்டும் கீச்சிட்டுக் கொண்டேயிருந்தது.

மறுபாட்டம் குனிந்து உள்ளே வந்த அவள், செத்தைப் படலையைத் தூக்கிச் சாத்திவிட்டு, கொப்பழித்துப்போன கண்களால் 'துரை'யை ஊனித்துப் பார்த்தாள். நெஞ்சு விம்ம அவர் எதிரே நின்று கைகளிரண்டையும் உயர்த்தி, ஒரு தடவை தன் தலையைக் கோதினாள் கோதி விட்டு ஒரு ஓரமாக நின்று கால்களால் நிலத்தை உராய்ந்து பக்க வாட்டுகளை ஒரு பாட்டம துட்பரவாக்கிவிட்டு, மெல்ல நகர்ந்து அவன் பக்கத்தே போய் நின்று சிரித்தாள்.

'என்ன சேர், 'சரி' தானுங்களே?'

இப்படிக் கேட்ட அதே வாயால் அந்தக் குப்பி விளக்கைப் 'பூ'வென்று ஊதி அணைத்தாள்.

குடிசை 'பக்'கென்று இருளில் மண்டியது.

தடவினாள் –

ஆள் அரவத்தையே காணவில்லை.

திகைத்துப் போனாள். நெஞ்சு குமுற உற்றுப் பார்த்தாள்.

'துரை' யை - அவனைக் காணவில்லை.

அவள் நெஞ்சு துருத்தியது. வெட்கங்கெட்ட தொழில்...?' அழவேண்டும்போல் ஒரு அந்தரிப்பு, ஆவேசம்... கண்களுள் நீர் துளும்பிற்று.

அந்த இருளினுள்ளே அவன் தேடலுக்கும் அகப்படாமல் மின்னலாக எங்கே அவன் மறைந்தான்?

நினைக்கவே அவள் நெஞ்சில் பறை கொட்டியது.

துரிதகதியில் குப்பி விளக்கைத் தேடி எடுத்துக் கொளுத்திவிட்டு, அங்கலாய்த்துக் கொண்டு அவனைத் தேடலானாள்.

அவள் கண்களில் பிரமிப்பும் ஏக்கமுமே எஞ்சின.

'ஐயோ' என்று வாய்விட்டு நெஞ்சு கமறக் குழற வேண்டும்போல் மனம் துருத்திற்று

கொலை செய்தவள் போல தத்தளித்த அவள் குப்பி விளக்கைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு மூலை முடுக்கெல்லாம் தேடியபடி ஒரு சின்னஞ்சிறு குழந்தைபோல் சிணுங்கிச் சிணுங்கி நெஞ்சு பதகளித்துக் கொண்டிருக்க, ஓர் ஆடவனின் புதிய கம்பீரக் குரல் கணீரிட்

(6ம் பக்கம் பார்க்க)

---

# காலத்தால் அழியாத வரலாற்றுக் கடிதங்கள்

### செல்வம் எங்கே செல்கிறது?

(சென்றவாரத் தொடர்)

நமது தேசத்தில் மிகுந்த ஏழ்மையும் துன்பமும் இருப்பது நன்றாகத் தெரிகிறது. ஆனால் பணக்கார தேசமாகிய இங்கிலாந்தில் கூட நிலைமை இம்மாதிரித்தான் இருக்கிறது. ஏன் இவ்விதம் இருக்கவேண்டும்? செல்வமெல்லாம் எங்கே செல்கிறது? தினம்தினம் செல்வம் வளர்ந்து கொண்டே இருக்க ஏழைகள் ஏழைகளாகவே இருப்பது ஆச்சரியமில்லையா? சில தேசங்களில் ஏழைகள் சிறிது நலம் பெற்றிருக்கிறார்கள்.. ஆனால் உற்பத்தியாயிருக்கும் புதிய செல்வத்தோடு அதை ஒப்பிட்டுப் பார்க்கும் போது அவர்கள் அடைந்திருப்பது மிகவும் சொற்பமே. இச்செல்வம் பெரும்பாலும் யாரிடம் செல்கிறது என்று நாம் எளிதில் தெரிந்து கொள்ளலாம். வழக்கப்போல் நிருவாகிகளும், நிருமாணிப்போரும் நல்ல பொருள்கள் எல்லாவற்றிலும் பெரும்பகுதியை எடுத்துக் கொள்கிறார்கள். இதைவிட ஆச்சரியம் என்னவென்றால் பிறர் உழைப்பின் பயனில் பெரும்பகுதியை எடுத்துக்கொள்ளும் இவர்கள் வேலை செய்வதாகப் பாவனைகூடச் செய்வதில்லை. இன்னும் என்ன? நான் சொன்னால் நீ அதை நம்புவாயா? இந்த சோம்பேறி வகுப்பினர்தான் மற்றவர்களால்கௌரவிக்கப்படுகிறார்கள் சிலமடையர்கள், ஒருவன் தன் ஜீவனத்துக்காக உழைப்பது இழிவென்று கருதுகிறார்கள்! உலகில் எல்லாம் இவ்வாறு தலைகீழ் பாடமாய் இருக்கிறது. நிலத்தில் பாடுபட்டும் தொழிற்சாலையில் வேலைசெய்தும் உலகத்துக்கு உணவையும் செல்வத்தையும் அளிக்கும் குடியானவனும் தொழிலாளியும் ஏழைகளாய் இருப்பதில் ஏதேனும் ஆச்சரியம் உண்டா?

நமது தேசத்திற்கு சுதந்திரம் வேண்டும் என்று நாம் கேட்கிறோம். ஆனால் இப்போதிருக்கும் தலைகீழ் பாடத்தை ஒழித்து உழைப்பின் பயனை உழைப்பவனுக்கு அளிக்க முடியாவிட்டால் சுதந்திரத்தினால் யாது பயன்? அரசியலைப்பற்றியும், அரசாங்கத்தை நடத்தும் முறையைப் பற்றியும், பொருளியலைப் பற்றியும், தேசத்தின் செல்வம் எவ்வாறு விநியோகிக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றியும் பெரிய பெரிய புத்தகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. கற்றறிந்த ஆசிரியர்கள் இவைகளைப் பற்றிப் பேசுகிறார்கள். இயமாதிரி பேச்சும் விவாதமும் நடந்துகொண்டிருக்கும்போது உழைப்பவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். 200 ஆண்டுகளுக்கு

## நேருவிடமிருந்து இந்திராவுக்கு

முன்பு வாழ்ந்த புகழ் பெற்ற பிரெஞ்சு ஆசிரியரான வால்டேர் என்பவர் அரசியல் வாதிகளைப் பற்றிப் பின்வருமாறு கூறினார்: "நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழுது பாடுபட்டுப் பிறர் உயிர்வாழ உதவி புரியும் மக்களை பசியினால் சாக அடிக்கும் முறையை இவர்கள் தங்களுடைய அருமையான அரசியலில் கண்டு பிடித்திருக்கிறார்கள்"

ஆதிகாலத்து மனிதன் சிறிது சிறிதாக இயற்கையை ஆக்கிரமம் செய்து முன்னேறினான். காட்டை அழித்து வீட்டைக் கட்டி நிலத்தைப் பண்படுத்தினான். ஓரளவுக்கு மனிதன் இயற்கையை வென்றுவிட்டதாகக் கருதப்படுகிறது. இயற்கையை வென்றுவிட்டதாகப் பலர் பேசுகிறார்கள் இது வெறும்பேச்சு. இது சரியல்ல. மனிதன் இயற்கையை அதிகமாக உணர உணர, அதனுடன் அதிகமாக ஒத்துழைத்து அதைத் தன் காரியங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டான் என்று சொல்வது பொருத்தமாயிருக்கும். பழைய காலத்தில் மனிதர்கள் இயற்கையையும் இயற்கையின் தோற்ற வேறுபாடுகளையும் கண்டு அஞ்சினர். அவர்கள் இயற்கையை உணரமுடியாமல், ஒரு காட்டுமிருகத்தைச் சமாதானம் செய்து சந்தோஷப் படுத்துவது போல அதற்கு பூசை செய்து வணங்க ஆரம்பித்தார்கள்.

இடியும் மின்னலும் கொள்ளை நோய்களும் அவர்களை அச்சுறுத்தின. பொங்கலிட்டு பூசை செய்வது இவைகளைத் தடுப்பதற்கு வழியென்று அவர்கள் எண்ணினார்கள் சூரிய கிரகணமும் சந்திரகிரகணமும் ஏற்பட்டால் அதைப்பெரிய பீடை என்றும் பலர் தெரியாமல் நினைக்கிறார்கள். அது ஒரு சாதாரண இயற்கை நிகழ்ச்சியென்று அறிந்து கொள்ளாமல் ஜனங்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

---

# பணப்பரிவர்த்தனை முறைகளில் சீட்டுப் பிடிக்கும் பழக்கம்

இன்று நாட்டிலும், நகரிலும், கிராமத்திலும், பட்டினத்திலும், பரவலாகக் காணப்படும் பணப்பரிவர்த்தனை முறைகளில் 'சீட்டு' பிடிப்பதும் முக்கியமான இடத்தை வகிக்கின்றது.

இதில் யாருமே பங்கு பற்றலாம். எவருமே விதிவிலக்கல்ல. பாட்டியானாலும் சரி, பாட்டனானாலும் சரி, தாய் தகப்பனோ,பிள்ளைகளோ, சகோதர சகோதரியரோ எவரும் அக்கறையுடன் பங்குபற்றுவது இந்தச் சீட்டுப் பிடிக்கும் பழக்கத்தில் தான்.

இந்தப் பழக்கம் எங்கு ஆரம்பமானது? எப்படி உருவகம் எடுத்தது?

மனித தேவைகள்!

மனித தேவைகள்!!

மனித தேவைகள்!!!

அதற்கு முக்கிய மூல காரணமாக அமைந்தது.

பணம் தட்டுப்பாடான நேரங்களில் பண்டம் பரிவர்த்தனையாகியது அல்லது அவசர தேவைக்கு பணம் கைமாறும் பழக்கம் சீட்டு முறையை உருவாக்கியது.

பலர் கூட்டுச் சேர்ந்து அத்தியாவசிய பாவனைப் பொருள்களை வாங்கத் தொடங்கினர் மொத்த விலையில் ஏற்படும் கழிவும், விசேஷ தள்ளுபடியும் கொள்வனவு செய்பவர்களுக்கு பெரிய லாபத்தை ஈட்டிக் கொடுத்தது.

நாளடைவில் இப்பழக்கம் நிலைகொண்டது. அதனால் தமக்குத் தேவையான சகல பொருள்களையும் இதே முறையில் வாங்க முற்பட்டனர். கொள்விலையை நிகரவிலையாக்கி தம்முள் பகிர்ந்தனர்.

சிறிது காலம் செல்ல, மாதாமாதம் கொள்வனவு செய்யும் திட்டம் மெல்லமெல்ல ஆரம்பமாகியது.

இவ் வழக்கம் தொடர...... சீட்டுப் பிடிக்கும் முறையும் தன்னை இனம் காட்டாமலேயே வளரத்தொடங்கியது.

[illegible] ஒவ்வொரு முறையும் தமக் [illegible]

பொருள்களைக் கொள்வனவு செய்யச் செல்பவர்களாக ஒருவர் மட்டும் செயல்படாமல் ஆட்கள் மாறினர்.

இதனால் ஆரம்பகால திட்டமும் மாற்றம் கண்டது.

கொள்விலைக்கும் நிகரவிலைக்கும் இடைப்பட்ட பணவித்தியாசம் கொள் முதல் செய்யச் செல்பவருக்கு உரியது என தீர்மானித்தனர்.

தரமான பொருள்கள் கிடைப்பதாக மகிழ்ச்சி ஒருபுறம். வசதியாக வீட்டிலேயே தமது விருப்பமான பொருள் கிடைக்கின்றதென்ற மகிழ்வு மறுபுறம்.

சிறியலாபம் தனிமனிதனுக்குப் போனாலும், பங்கு பற்றும் ஒவ்வொருவரும் தத்தமக்கு பெரிய லாபம் கிடைத்ததாகவே கருதினர்.

இது தொடரத் தொடர.........

பழக்கம்......

வழக்கமானது.

வழக்கம் சம்பிரதாயமானது. சம்பிரதாயம் இன்று கட்டாயமாகி விட்டது.

பணம் இன்று புரள்கின்றது.

நம்பிக்கையானவர்கள் கூட்டுச் சேர்ந்தால் 'தங்கு தடையின்றி' பணம் கைமாறும்.

ஏமாற்றுபவர்களும் போக்கிரிகளும் தற்செயலாக இக் கூட்டில் அங்கம் பெற நேர்ந்துவிடின்; அவ்வளவுதான்!

தங்குதடை அற்ற நிலைமை தடையும் தடங்கலுமாக மாறும்.

தடையும் தடங்கலும் தோன்றியதும், சீட்டுப் பழக்கம் வியாபார ரீதியாக விஸ்தீரணம் பெற்றது

## வைப்பிலிட உதவும் வங்கிபோல இந்தநடைமுறைவளர்ந்துவருகிறது

பண்டங்களுடன் மட்டுமே தோன்றிய பரிவர்த்தனை —

நாளடைவில் பணத்தையும் தாவிப் பிடித்தது!

பத்துப் பேரோ பதினைந்து பேரோ ஒன்று சேர்ந்து ஒரு தொகைப் பணத்தை தம்முள் ஒருவருக்கு ஏற்படும் ஏதோ தேவைக்கு கொடுப்பார்கள்.

பெரிய நிம்மதிப்பெருமூச்சுடன் அப்பணத்தைத் தனது உரிய அவசிய தேவைக்குப் பயன்படுத்தும் அவர் பின்னர் மாதாமாதம் அப்பணத்தை பகுதி பகுதியாக மீளளிப்பார்.

[illegible] நபர் அடுத்த மாதம் பணத் [illegible]

பின்னர்தான்!!

ஆரம்பகாலத்தில் நம்பிக்கையும் உதவும் மனப்பான்மையும் ஒன்றுசேர உருக்கொண்டு வளர்ந்தது சீட்டு பிடிக்கும் பழக்கம்.

காலம் செல்லச் செல்ல இந்த நடைமுறை வியாபாரமாக மாறியது. முதலாவது சீட்டை, சீட்டுப் பிடிப்பவரே தனதாக்குகிறார். முழுத்தொகையும் எவ்வித கழிவுமின்றி முதல் மாதமே அவருக்குச் சேரவேண்டும்.

— தொடரும் பண பரிவர்த்தனைகளில் கழிவு முறைகளும் தொடரும்

யாருக்கு அதிக தேவையோ அவர் அதிக கழிவுடன் பணத்தை எடுக்க முன்வருவார். அவரிலும் கூடுதலான தேவையுடைய இன்னுமொருவர் கூடுதலாக கழிவு தொகையைக் கேட்பார். ஏல முறையில் பணம் ஏலம் போகும்.

ஆகக் கூடுதலான தேவையுடையவர் ஆகக் கூடுதலான கழிவுடன் பணத்தை எடுப்பார்.

—இதனால் உடனடியாக அவரது தேவை சமாளிக்கப்படுகின்றது பூர்த்தி செய்யப்படுகின்றது என்பதில் அவருக்கு லாபம்.

அதிக கழிவால் தாம் கட்டவேண்டிய தொகையும் கணிசமாகக் குறையும் என்பதால் பங்குபற்றுபவர்களுக்கும் லாபம்.

இது தவிர குலுக்கல் முறையும் சீட்டுப் பிடிப்பவர்களிடம் உண்டு.

மாதாமாதம் எவ்வித கழிவுகளுமின்றி, ஒருவருக்கு பணம் கிடைக்கும். குலுக்கல் மூலம் பணம் பெறுபவரின் பெயர் தெரிவாகும் பணமும் சீராகக் கைமாறும்.

சீட்டு முறை உலகின் எல்லாப் பகுதிகளிலும் பரந்து விரிவடைந்துள்ளது. முதலாளிகளும் தமக்கு அது இலகுவானதும் லாபமானதும் எனக் கருதுகின்றார்கள். பணத் தட்டுப்பாடு உள்ளவர்களும் ஒருவகையில் தமக்கு இப்பழக்கம் நல்ல கட்டுப்பாடு என உளமார உணர்கின்றார்கள்.

இதனால் கட்டாயமாகச் சேமிக்கும் பழக்கம் தெரிந்தோ தெரியாமலோ நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

பரவலாக கிராமமக்களிடமே சீட்டுப்பழக்கம் காணப்படினும், பல நாடுகளில் அரச அங்கீகாரம் கூட இதற்கு உண்டு.

சீட்டுப் பழக்கத்தால் பணத்தேக்கம் ஏற்படாமல் தடுக்கப்படுகின்றது.

மதுவைத் தொட்டவனும் அதை விட்டதில்லை

சீட்டைத் தொட்டவனும் பொதுவாக அதில் இருந்து விடுபடுவதில்லை

தேவைகள் வளர வளர சீட்டினது பங்களிப்பும் வளர்கின்றது.

போகிற போக்கில் வறுமையில்வாடும் சிறிய நாடுகள் கூட தம்முள் சீட்டு முறையை ஆரம்பித்தாலும் வியப்பில்லை!

★ சர்வதனன் ★

### அதிகம் விற்ற புத்தகங்கள்

இதுவரையில் அதிகமான விற்பனையில் முன்னணியில் நிற்கும் மூன்று புத்தகங்கள்:-

1. பைபிள்; 245 கோடி 80 லட்சம் பிரதிகள்.

2. மாசேதுங் புத்தகங்களிலிருந்து மேற்கோள்கள்: 80 கோடி பிரதிகள்.

நோவா வெப்ஸ்டர் முதிய 'அமெரிக்கன்' ஸ்பெல்லிங் புக்': 10 கோடி பிரதிகள்

(உ-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் நோய்கள் பலவற்றைக் குணமாக்கும்

## கைகண்ட மருந்து வெள்ளைப்பூடு

மனிதனின் நலனை உள்ளத்தில் வைத்துத்தான் இயற்கையும் செயல்படுகின்றது வெள்ளைப்பூடு. இதனை நன்கு உணர்த்துகிறது.

பூவுலகில் வெள்ளைப்பூண்டிலே பலவகை உண்டு. சகல நோய்களுக்கு நிவாரணம் அளிக்கும் மருந்தாக வெள்ளைபூடு உள்ளது. ஒரு வெள்ளைப்பூண்டிலே இரண்டு முதல் ஐம்பது வரை பருப்புக்கள் உண்டு

உலகின் சில பகுதிகளில் வாழ்பவர்கள் வெள்ளைப்பூண்டில் உள்ள பருப்புக்களைச் சாப்பிட விரும்புவதில்லை. வெங்காயக்கீரை போன்று வளரும் வெள்ளைப்பூண்டின் கீரையைச் சாப்பிடுவதிலேயே அவர்கள் அக்கறை காட்டுகின்றனர்.

லத்தீனில் இப்பயிரின் பெயர் ஒலியம் சட்டிவம் (Allium Sativum) என்பது யாரோ ஒருவர் இப்பயிரின் வேரை நிலத்தில் இருந்து பிடுங்கினார். சாப்பிடக் கூடியதா? என்று பார்க்க அதனை மென்று விழுங்கினார் உடனே எரிவது போன்ற உணர்ச்சிஒன்றை அவர் அனுபவித்தார். விரும்பத்தகாத மணமும் அடித்தது

ஆச்சரியமான முறையில் அவரின் வயிற்றில் இருந்த நோவு திடீரென்று சுகமாகியது.

இது தற்செயலாக நேர்ந்தது அல்ல.

வெள்ளைப்பூண்டில் உள்ள நோய் தீர்க்கும் தன்மைகள் கி. பி. முதலாம் நூற்றாண்டில் ரோம் நாட்டு வைத்திய நிபுணர் டயோஸ் கோர்டி என்பவர் தொகுத்து இருந்தார்.

அந்தக் காலத்திலேயே குடற்புண், தோலில் உருவாகும் வீக்கம் முதலியனவற்றைச் சுகப்படுத்தக் கூடியது வெள்ளைப்பூண்டு என்று கண்டுபிடிக்கப்பட்டது.

...துக் கொள்ளலாம்.

அதிக இரத்த அழுத்தம் உள்ளவர்கள் தினமும் இரண்டு அல்லது மூன்று உள்ளிப் பருப்புக்களை சாப்பிட்டு வர வேண்டும். இது இரத்தக் குழாய்களை விரிவடையச் செய்கிறது. தலையிடி, நித்திரையின்மை, மயக்கம் முதலியவற்றை நீக்...

என்பதைப் பற்றிய ஆராய்ச்சி தற்போது நடந்து கொண்டிருக்கின்றது

தினசரி உணவில் வெள்ளைப் பூண்டு சேர்க்கப்பட வேண்டும் ஒன்று அல்லது இரண்டு பருப்பு போதுமானது. வெள்ளைப்பூண்டு வாயையும் சுத்திகரிக்க உதவுகிறது.

2, 3 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு சிறிய அளவில்தான் பூடு கொடுக்கப்பட வேண்டும். பாண் துண்டில் வெள்ளைப்பூண்டை உரசி விட்டால் குழந்தைகளுக்குப் போதுமானது. பூண்டில், பி. சி. டி. விட்டமின்கள் செறிந்து உள்ளன. அதனால்தான் சொறி சக...

### இம்மருத்துவ மூலிகையின் அதிஅற்புத ஆற்றலை

### ரோமர்கள் முதலாம் நூற்றாண்டிலேயே உணர்ந்து விட்டனர்

இருமலையும், குடல் நோய்களையும் தீர்க்கவல்லது இது. நிறைகுறைந்து வருவதைத் தடுத்து நிறுத்தவும் ஜீரண சக்தியை அதிகரிக்கவும் பூடு உதவுகிறது

கக்குவான் இருமல், ஜலதோஷம், ஆஸ்த்துமா ஆகியவற்றுக்கு பூண்டை அரைத்து வெண்ணெயுடன் கலந்து மார்பில் பூச சுகம் தரும்.

நன்றாக அரைத்து, அவித்த வெள்ளைப் பூண்டை வெண்ணெயுடன் கலந்து வேதனை தரும் கால் ஆணிக்கு வைத்துக் கட்டினால் சுகம் தரும்.

துப்புரவுசெய்யப்பட்ட வெள்ளைப் பூண்டுப் பருப்பை பாலில் அவித்த பின்னர் எடுத்து மஸாஜ் செய்தாலும் கால் ஆணி சுகமாகும்.

கடுமையான எக்ஸிமா, பங்கசுநோய், பாலுண்ணி கழலைகளுக்கும் வெள்ளைப் பூண்டைத் தேய்த்துக் கொண்டால் பயன் தரும்.

தலைமயிர் உறுதியடையவும் வெள்ளைப்பூண்டைத் தலையில் தேய்த்...

...கும்.

எப்போதும் ஒரே இடத்தில் இருந்து வேலை செய்பவர்களுக்கும் வெள்ளைபூண்டு அத்தியாவசியமானது. இது அவர்களின் மூளை, இருதயம், பாலுணர்வுச் சுரப்பிகள் முதலியவற்றைச் சுறுசுறுப்பாக்கும்

அரைக்கப்பட்ட வெள்ளைப்பூண்டை ஆவியாக்கி முகர்ந்தால் ஜலதோஷத்தையும் பீனிசம் முதலியவற்றையும் தூரம்...

**எஸ். ஜி.**

...பத்திலேயே குணப்படுத்தி விடலாம்.

கக்குவான் இருமல், நிமோனியா, காதில் ஏற்படும் வீக்கம், கண்களில் ஏற்படும்சவ்வு, முதலியனவும் வெள்ளைப்பூண்டின் ஆவியை முகர்வதன் மூலமும் சுகமாகும்.

வெள்ளைப் பூண்டை உணவில் சேர்த்துச் சாப்பிடுவதன் மூலம் சளி, குடல்நோய்கள் ஆகியன குணமாகும்.

புற்றுநோயைத் தடுக்கக் கூடிய சக்திகள் பூண்டில் இருக்கின்றனவா?

நெஞ்செரிவு ஏற்படுவது தேவைக்கு அதிகமாக வெள்ளைப்பூண்டு பாவித்ததற்கு அறிகுறியாகும்.

...மாகிறது. சீரண சக்தியை ஒழுங்காக்கும் தன்மையும் பூண்டுக்கு (7ம் பக்கம் பார்க்க)

# குடல்புண் நோயைத் தடுக்க ஹோமியோபதி சிகிச்சை முறை

உலகில் வாழ் மக்களில் பலர் குடற் புண்ணினால் துன்புறுகின்றனர் இதற்கு மனக்கவலையும் காரணமாகும். சீரண உறுப்புகளுக்கும், உடலின் உள்ளத்திற்கும் நெருங்கிய தொடர்பு

கின்றது. உற்சாகம் குறைகின்றது விரும்பும் உணவை உண்ண முடி

### குடலில் ஏற்படும் அமிலச்சுரப்பை கூடிய அளவு கட்டுப்படுத்த வேண்டும்

யாமல் தவிக்கின்றனர். இவர்களது வயிற்றில்

கின்றது. இப் புண் உள்ளவர்கள் பசி எடுத்தால் அடிக்கடி சாப்பிடவேண்டும். இவர்கள் பட்டினி கிடக்கவோ,




இருப்பதால், உள்ளம் பாதிக்கப்பட்டால் சீரண உறுப்புகள் சேடுறுகின்றன. இதனால் வயிற்றில் அமிலம் மிகுதியாக உண்டாகின்றது. உட கெடு

எம். வி. தில்லைச்சந்திரன் (ஹோமியோபதி வைத்தியர்)

அமிலங்கள் அதிகமாக உற்பத்தியாகி குடலில் புண்ணை உண்டாக்கி விடு

விரதம் அனுஷ்டிக்கவோ கூடாது அமிலங்கள் அடிக்கடி சுரப்பதனால் அதிகம் பசி இருக்கும். சிலருக்கு அறவே பசி இருக்காது. சிலர் செமியாமை, மலச்சிக்கல் முதலியவற்றினால் அவஸ்தைப்படுகின்றனர். புண் முற்றும் கட்டத்தில் நெஞ்செரிவு, புளித்த வாயாலெடுப்பு முதலியனவும் தோன்றும். எவ்வகைச் சிகிச்சைகளும் செய்து அதனால் ஒரு வித பயனுமின்றி விரக்தி மனப்பான்மையுடன் நோயாளிகள் திரிவதை கண் கூடாகக் காணக் கூடியதாக இருக்கின்றது.

இந்நோய் நாள்பட்டு அதனால் புண் ஆழமாகி துவாரம் ஏற்பட்டு, உண்ட உணவுகள் சுற்றுப் புறங்களில் சென்று மரணம் சம்பவிக்கவும் இ முண்டு புண்ணிலிருந்து இரத்தம் கசிந்து அதனால் இரத்தப்பெருக் கெடுத்து ஆபத்தும் ஏற்படலாம். ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு இன்றி எல்லோருமே இந் (7ம் பக்கம் பார்க்க)

# இரகப் பார்வையில் வருகிற வாரம் நாட்டுநிலை

| திகதி கிழமை | பிரச்சினை ஏற்படக்கூடிய இடங்கள் | பாதிக்கப்படக் கூடியவர்களின் நட்சத்திரங்கள் |
|---|---|---|
| 29-6-86 ஞாயிறு | தென்மாகாணம், வடமேல்மாகாணம் | மகம், பூரம், சுவாதி, விசாகம், உத்தரட்டாதி, ரேவதி, |
| 30-6-86 திங்கள் | வடமாகாணம், கிழக்குமாகாணம் மேல்மாகாணம். | அச்சுவினி, பூரம், உத்தரம், விசாகம், அனுஷம், ரேவதி. |
| 1-7-86 செவ்வாய் | வடமாகாணம், வடமத்தியமாகாணம், மத்தியமாகாணம். | அச்சுவினி, பரணி, உத்தரம், அத்தம், அனுஷம், கேட்டை. |
| 2-7-86 புதன் | கிழக்கு மாகாணம், வடமத்திய மாகாணம் | பரணி, கார்த்திகை, அத்தம், சித்திரை, கேட்டை. |
| 3-7-86 வியாழன் | வடமாகாணம் (இரவில்). | கார்த்திகை, சித்திரை, சுவாதி, மூலம், |
| 4-7-86 வெள்ளி | பொதுவாக அமைதி நிலவும், வடக்கு, மத்திய, வடமத்திய மாகாணங்களில் சிறு சம்பவங்கள் நிகழலாம். | ரோகிணி, சுவாதி, மூலம், பூராடம். |
| 5-7-86 சனி | மத்திய மாகாணம், மலையகம் - (பிற்பகலில்) தென்னிலங்கையில் மழை பெய்யக் கூடும். | மிருகசீரிடம், விசாகம், அனுஷம், பூராடம், உத்தராடம். |

"இறையருட் செல்வன்"

# பண்டிதமணி: வரலாறும் காலமும்---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மதம் மாறுமல் சைவனுவே இருந்த அருணசலம், பரீட்சை எழுதி முடிந்ததும் இரவோடிரவாக உடுப்புப் பெட்டியையும் தூக்கி மதிலுக்கு அப்பால் போட்டுவிட்டு, தானும் மதிலேறிப் பாய்ந்து வெளியேறினுர்.

தப்பிச் சென்ற அருணசலத்துக்குத் தராதரப் பத்திரமும், ஆசிரியர் வேலையும் கிடைக்கவில்லை.

வேலை கிடைக்காவிட்டாலும் உரிமையுள்ள தராதரப்பத்திரங் கிடையாமையால் பெரிதும் வருந்தித் தம்மோடொத்த சைவத்தமிழிளைஞர்கள் தாம்பட்ட பாட்டினைப்படுதலாகாது எனக் கொண்ட தாராள மனப்பான்மை காரணமாக முன்னர் ஆறுமுக நாவலர் அவர்கள் சைவாசிரியர்களைப் பயிற்றுவதற்குத் திட்டிய திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்குத் தம் கால் ஓயாமல் நடக்கத் தொடங்கினர். இங்கிருந்து கொழும்புக்கு நடந்து சென்று சேர். அருணசலம் அவர்களையும் கண்டு எங்கள் தேவைகளை எடுத்துரைத்தார்.

இவ்வாருகச் சைவத் தமிழரின் நியதிதத்துவமும் காலதத்துவமும் சம்பவித்த வேளையில் பன்னுலைப் பிரபுவும் அந்நாளில் சட்டசபை, சட்ட நிருபணசபை அங்கத்தவருமாய சேர் அம்பலவாணர் கனகசபை அவர்கள் தலையிட்டு அருணசலம், குமாரவேலு, கதிரேசபிள்ளை ஆகியோருக்குரிய பயிற்றப் பெற்ற ஆசிரிய தராதரப் பத்திரங்கள் கிடைக்கும் வகை செய்தார். இதற்குள் அருணசலம் தாம் புறச் சமயச் சூழலில் வாழ்ந்து தொடர்பு பட்ட மாசு நீங்குவதற்குப் பிராயச்சித்தமாகத் தமிழ் நாடெங்கும் யாத்திரை செய்து மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாகக் கண்டு வந்தார்.

புனிதராய் மீண்ட அருணசலம் தமது ஊரிலும் அயலூர்களிலும் சைவப் பாடசாலைகளை ஆரம்பிக்கும் பெரும்பணியில் ஈடுபட்டார். குட்டிப்புலம் என்னும் ஊரைச் சேர்ந்த சுப்பிரமணியம் என்னும் பெரியாரின் உபகரிப்பினுல் சுப்பிரமணிய வித்தியாசாலை உருவானதும் அதற்கு உடனடியாக உதவி நன்கொடை பெறுவதற்கும் அரசாங்கத்தில் ஆவன செய்தவர் சேர். பொன் இராமநாதன் அவர்களாவர்.

காரைநகரில்கோவிந்தபிள்ளை என்பார் பெருநிலப்பரப்பினை நன்கொடை செய்தபோது, அங்கே ஒரு சைவத் தமிழ்ப் பாடசாலையை அருணசலம் அவர்கள் ஆரம்பித்து அங்கே பணியாற்றுவதற்கு நல்லதம்பி சயம்பு என்னும் பெரியாரை நியமித்தார். சயம்புவின் பள்ளிக்கூடம் என வழங்கிய பாடசாலை திருஞானசம்பந்த வித்தியாசாலை என வழங்கி நாளடைவில் காரைநகர் சைவாங்கில வித்தியாசாலையெனப் பெயர் பெற்று, காரைநகர் இந்துக் கல்லூரியெனப் புகழ் பெற்று, கலாநிதி தியாகராசா மகாவித்தியாலயமாக மலர்ச்சி பெறும் வகையில் அது ஒளி வீசுகின்றது.

மகாவித்தியாலயத்தின் முன்பக்கத்தில் சிலையாய் எழுந்துள்ள சயம்பர் அன்று சைவத்தமிழ் மாணுக்கர்களை உருவாக்கியபோது, கௌபீனந் தரித்தல், ஆசார நியமங்களைத் தழுவுதல், ஆலயந் தொழுதல், திருப்பணி செய்தல் முதலிய அடிப்படை ஒழுக்கங்களைப் பழக்கியதோடு, அவர்களைத் தம் வீட்டுக்கு அழைத்து இலவசமாக மேலதிக ஆங்கிலமும் போதித்துவந்தமையாற் போலும் காரைநகர்வாசிகள் மலேயாவில் பெருமளவில் உத்தியோகம் பெற வாய்ப்புக் கிடைத்தது.

நல்லூரைச் சேர்ந்த நல்லதம்பி சயம்பரோடு சக ஆசிரியராயிருந்த பருத்தித்துறையைச் சேர்ந்த சுப்பிரமணிய தேசிகர் என்பார் கிரியா மார்க்கத்தில் பெரும் புகழ் பெற்றதோடு நூல்களும் எழுதியவர். இவர்கள் கற்பித்த பாடசாலையில் அன்று உருவாய மாணுக்கர்களுள் ஒருவர் பண்டித அருளம்பலவனார். பண்டிதர் அவர்கள் திருமுருகாற்றுப்படை, திருவாசகம் முதலிய பெருநூல்களுக்குத் திவ்வியம் பழுத்த செந்தமிழ் உரைகள் எழுதித் தமிழ்நாட்டிலும் புகழ் பெற்றவர்

(வளரும்)

# ஒரு குப்பி விளக்கு---

(5ம் பக்கத் தொடர்ச்சி)

...டது.

'சகோதரி, இருட்டில் என்னைத் தேடவேண்டாம். நான் போகவில்லை. வெளியில்தான் இருக்கிறேன்'

'எடியங்கம்மாடியோ'

பயந்தெளிந்த உசாரில் அவளுக்கு உடல் சிலிர்க்க ஒரு சிரிப்பு வெடித்தது. மனசு என்னமோவெல்லாம் கற்பனை பண்ணிற்று. கருமங்கள் எதிர்பாராமலும் வியப்பாகவுமிருப்பதால் அவள் தடுமாற்றத்துடன் ஏந்திப் பிடித்த குப்பி விளக்கை அணைக்காமல் துரை'யின் முகத்துக்கு, எதிரே பிடித்தாள்.

'ஆ...!'

வெடித்துச் சிதறிய தக்காளிப்பழம்போல் 'துரை'யின் கண்களில் துவைந்த கண்ணீர் அவரின் இரு கன்னங்களிலும் குதம்பிப் 'பளபள' த்தது.

'ஐயோ சேர், நான் என்ன தப்பு செஞ்சேன்; இதென்னுங்க ஒங்க கோலம்?'

அவள் பரிதவித்துப் போட்ட கூச்சல், பூகம்பித்த அவன் நெஞ்சில் இடித்தபோது, அவன் சிறு குழந்தை போல் மிரண்டான்.

'சகோதரி, உனது மனந்திறந்து இதயத்தால் உண்மை சொல்லு: நீ எப்போதாவது இப்படியெல்லாம் உன் மனசு விரும்பித்தான் நடக்கிருயா...?'

இப்படி நேரிடையாகக் கேட்ட அவன், அவள் முகத்தையும் ஏறெடுத்தே பார்த்தான்.

அவள் தயக்கமாக 'ஆம்' என்று ஒப்புவிக்கும் பாவனையில் தலையாட்டினுள்.

இந்த ஒப்புதல் தன் மனச்சாட்சிக்கு விரோதமாக இருப்பினும், தான் அவமானப்படக்கூடாதென்பதால் சிறிது பாசாங்கு பண்ணினுன்.

அந்தப் பாசாங்கில் ஒரு பரத்தைத் தனமோ, அருசையோ, ஆபாசமோ கூட இருப்பதாக அப்போது அவனுக்குப் படவுமில்லை.

இப்பேர்ப்பட்ட பரிசுத்தமான அவள் நெஞ்சில் இந்த ஒழுக்கக்கேடு - அசிங்கமான நடத்தை எப்படித்தலையெடுத்தது; இவளை அது ஆட்கொண்டதற்கான சக்தி இவளையும் மீறி எங்கிருந்து உதித்தது என்கிற விசாரத்தில் அவன் மூழ்கினுன்.

'நீ உன் மனச்சாட்சிக்கு விரோதமாகவே படுபொய் சொல்கிருய். நான் நம்ப மாட்டேன்'

அவளை மீண்டும் உற்றுப் பார்த்தான்.

அவள் திகைத்துப் போய் நின்றுள்

'நீஎதை ஒழுக்கக்கேடு-வெட்கங்கெட்டது என்று கருதுகிருயோ அதை வெளியே மனந்திறந்து சொல்லக் கூச்சப்படும்போது தான் அந்த ஒழுக்கக் கேட்டுக்குக் காத்திரமும் அர்த்தமும் உண்டாகின்றது. அதையேகூச்சப்படாமல் உள்ளதை உள்ளவாறு சொன்னுல், அது எத்தகைய அசிங்கமாக இருந்தாலும் அதுவே ஓர் எச்சரிக்கையாக - ஒரு நல் வாழ்வுக்கு வழிகாட்டியாக அமைகிறது. ஒழுக்கக்கேட்டை-அதன் விளைவுகளை மறைப்பதுதான் பெரிய ஒழுக்கக்கேடு. அது அதற்கே துணை செய்வதாகும். உண்மையில் ஒழுக்கங் கெட்டவள் குற்றவாளியல்ல; ஒழுக்கக் கேடாக்கினவன்தான் குற்றவாளி. ஆனபடியால் உன் நெஞ்சு திறந்து மனங்கூசாமல் சொல்லு: நீ எப்போதாவது உன் பூரண மன இசைவோடுதான் இப்படி நடந்து கொள்கிருயா?

(வளரும்)

# காலத்தால் அழியாத---

(5ம் பக்கத் தொடர்ச்சி)

அதைப்பற்றி வீணே கவலைப்பட்டுக் குளித்து முழுகி பட்டினி இருந்து சூரியனையும் சந்திரனையும் காப்பாற்ற முற்படுகிருர்கள்!

சூரியனும் சந்திரனும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் வல்லமை பெற்றிருக்கின்றன நாம் அவைகளைப் பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை.

மக்கள் கிராமங்களிலும் பட்டணங்களிலும் குடியேறி வாழ ஆரம்பித்தவுடன் கலை, நாகரிகங்கள் தோன்றி வளர்வதைப் பார்த்தோம். உணவுப்பொருள் அதிகமாகக் கிடைக்கவே ஒழிவு நேரமும் அதிகமாயிற்று. வேட்டையாடுவதிலும் சாப்பிடுவதிலுமே பொழுதைப் போக்காமல் வேறு விஷயங்களைப் பற்றியும் அவர்கள் சிந்திக்க ஆரம்பித்தார்கள். சிந்தனை வளர வளரக் கைத்தொழில்களும் சித்திர வேலைப்பாடுகளும் கலைகளும் சிறிது சிறிதாக வளர ஆரம்பித்தன ஜனத்தொகை பெருகவே ஒருவருக்கொருவர் நெருங்கி வாழ நேரிட்டது பல காரியங்களின் நிமித்தம் சதா ஒருவரை ஒருவர் சந்தித்து பழகி வந்தார்கள். ஜனங்கள் சேர்ந்து வாழவேண்டுமானுல் ஒருவர் மற்றவர் மனதை அறிந்து ஒழுகவேண்டும். அண்டை அயலார், தோழர்கள் ஆகியோருடைய மனம் புண்படும்படியான காரியத்தைச் செய்யக்கூடாது. இல்லாவிட்டால் சமுதாய வாழ்வு நடைபெற முடியாது. உதாரணமாக ஒரு குடும்பத்தை எடுத்துக்கொள். குடும்பம் ஒரு சிறு சமூகம் மாதிரி. ஒரு குடும்பம் சந்தோஷமாக வாழ்க்கை நடத்த வேண்டுமானுல் அதைச் சேர்ந்தவர்கள் ஒருவரோடு ஒருவர் இணங்கி நடக்க வேண்டும். ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அன்புத்தளையால் பிணைக்கப்பட்டிருப்பதால் இது கஷ்டமல்ல அப்படி இருந்தும் சில சமயங்களில் நாம் அதை மறந்து அநாகரிகமாக நடந்து கொள்கிரும். குடும்பத்தை விட ஒரு பெரிய கூட்டத்திற்கும் இது பொருந்தும். நமக்கு அருகில் வாழ்வோர், நமது நகரத்தைச் சேர்ந்தவர்கள் — நமது தேச மக்கள், இன்னும் மற்ற நாட்டவர் எல்லாருக்கும் இது பொதுவானது. ஆகவே ஜனத்தொகை அதிகரிக்கவே தன்னடக்கத்துடன் பிறர் நோக்கம் அறிந்து செல்லும் குணம் விளங்கிச் சமூக வாழ்க்கை சிறந்தது. கலை, நாகரிகங்கள் என்பன இன்னின்னவை என்று அறுதியிட்டுச் சொல்வது கடினம். நான் அக்காரியத்தை மேற்கொள்ளப்போவதும் இல்லை நாகரிகம் குறிக்கும் பல பண்புகளில் தன்னடக்கமும் பிறர் மனது அறிந்து ஒழுகுதலும் அவசியம் அடங்கி இருக்கின்றன. ஒருவன் தன்னை அடக்கிப் பிறர் மனதுமறிந்து ஒழுகானுயின் அவனை நாகரிகமற்றவன் என்று சந்தேகம் இன்றிச் சொல்லலாம்.

*

# நாவினுக்கு அருங்--

(5ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது. இறைவனைப் பற்றிய பாடல்கள் அல்லது நூல்கள் என்பது திருமுறையின் பொருளாகும்.

பன்னிரண்டு மாதங்களுக்கும் பன்னிரண்டு திருமுறைகளையும் ஓத வேண்டும். வைகாசி மாதத்தில் முதலாம் திருமுறையை ஆரம்பிக்க வேண்டும். ஞானசம்பந்தப்பெருமானுடைய குருபூசைத்தினமும் வைகாசி மாதத்தில் வருகின்றது. எட்டாம் திருமுறையாகிய திருவாசகம் மார்கழிமாதத்தில் பொருத்தமாக வருகின்றது. மார்கழி மாதம் முழுவதும் திருவாசகம் மாத்திரமே ஓதும் வழக்கமும் உண்டு பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரியபுராணம் சித்திரை மாதத்தில் அரங்கேற்றம் ஆரம்பித்து அடுத்த சித்திரையில் முடிவுற்றதென வரலாறு கூறுகின்றது.

தினமும் ஒரு திருமுறையாவது ஓதி வருதல் நல்லது. சிவபுராணத்தை தினமும் காலைமாலை பாராயணம் செய்து வருதல் நல்லது.

'திருமுறை ஓதிடத் தீவினை மாளும்' என்பதன்படி திருமுறைகள் பாராயணம் செய்யும் வீட்டில் தீமைகள் தலைகாட்டமாட்டா.

இக்கருத்துக்களை எல்லாம் அடக்கிய பாடல் ஒன்று குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளால் அருளப்பெற்ற சிவபோகசாரம் என்ற நூலில் காணப்படுகின்றது. அப்பாடல் பின்வருமாறு:

ஆசையறுய் பாசம் விடாய் ஆனசிவ பூசைபண்ணுய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய் — சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்.

பொழிப்பு:- பொருள்கள் மேற்செல்லும் அவாவை யறுத்தலும், யான் எனது என்னும் பற்றுக்களை விடுதலும், வழுவாது சிவபூசை செய்தலும், அன்புடன் திருவைந்தெழுத்தை எண்ணுதலும், பாவங்களுக்கு இடமான வெகுளியை மறத்தலும், தேவாரம் திருவாசகம் முதலிய பன்னிரு திருமுறைகளை ஓதுதலும் உய்தி வேண்டுவார்க்கு இன்றியமையாத செயல்களாம். ஆதலின் அவற்றைச் செய்யாதார் பிற அருஞ் செயல்களைச் செய்தாராயினும் தமக்கு உறுதி தேடாமையின் அறிவுடையோரான் இகழப்படுவர். ★

# எமதர்மனும் -

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பாடில்லை. எனவே தான் உங்கள் எருமை வாகனத்திற்கு மக்கள் என்றுலே ஒரு வெறுப்பு. அதனுல் தான் மனிதாபிமான மற்ற இந்த மனிதர்களின் உயிர்களைப் பறிக்க தாங்கள் புறப்படுவதற்கு முன்னதாகவே உங்கள் வாகனம் குதித்துக்கொண்டு செல்லுகிறது. இதுதான் காரணம்.

ஆதாரம்: இராமராஜ்யம்

# பல நிலை---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது. இந்த நிலையங்களில் நோயாளர்கள் பரிசோதனை செய்யப்பட்டுத் தேவைப்படின் நிபுணத்துவ சிகிச்சைககுச் சிபார்சு செய்யப்பட்டால் யாழ் போதனு வைத்தியசாலைக்கு அவர்கள் வருவது நியாயமே.

அப்படியான நிலைமை இல்லாதவிடத்து காய்ச்சல் போன்ற சாதாரண நோய்களுக்குச் சிகிச்சை பெறவும், காயங்களுக்கு மருந்து கட்டவும், தூரத்து கிராமங்களில் இருந்து பயணச் செலவு செய்து, பீதியின் மத்தியில் பெருந்தொகையான நோயாயர்கள் இவ்வைத்தியசாலைக்கு வருகிருர்கள். இதனுலே நமது வைத்திய சேவைக்கு வேலைப்பளு அதிகரிக்கிறது இதனை நோயாளர்கள் தவிர்ப்பது நலமாகும்.

**பார்வையாளர்கள்**

நோயாளர்களைப் பார்வையிட வரும் உறவினர்கள் நண்பர்கள் பல சந்தர்ப்பங்களில் வைத்திய சாலை நிர்வாகத்துக்கு ஒரு தொல்லையாக இருக்கிருர்கள்.

இரவு கடமையில் ஈடுபட்ட தாதிகள் காலை தம்மிடம் கடமை ஏற்போரிடம் நோயாளர்களைப் பற்றிய விவரங்களைக் கூறவேண்டும் பிற்பகல் 2 மணிக்கு மருந்து கொடுக்கவும், சத்திர சிகிச்சை செய்யவும் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் பார்வையாளர்கள் எல்லா வேளைகளிலும் நோயாளரைப் பார்க்கச் செல்வதால் இக்கடமைகளை நமதுவைத்தியசாலை ஊழியர் செவ்வனே செய்ய முடிவதில்லை

நோயாளர்கள் பல்வேறு நோய்க்கிருமிகளினுல் தாக்குண்டு பலமிழந்து இருப்பவர்கள் பார்வையாளர்கள் பெருந்தொகையில் சென்று சிலவேளைகளில் நோயாளர்களின் படுக்கைகளில் அமர்வதால் புதுநோய்கள் தொற்றும் அபாயம் அவர்களுக்கு ஏற்படுகின்றது.

சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு அமைதி (7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இந்திய நல்லுறவை புரிந்து...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுவரும் நடவடிக்கைகள் இலங்கை அரசு நிலைக்கும் தமிழர் நிலைக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைப்பதற்கு உதவும் நிலையில் இந்தியா இருக்கலாம் என்பதைக் காட்டுகின்றது

அரசியல் தீர்வுக்கான ஒரு அடிப்படையாக சுதந்திரமான பொரிக ஒன்றை இந்தியா இருதரப்பாருக்கும் சமர்ப்பிக்க கூடும்.

### நல்லதொரு அடிப்படை

1983இல் இந்தியா இனப்பிரச்சினைக்குத் தீர்வுகான நல்லதொரு அடிப்படையைத் தயாரித்துக் கொடுத்தது சர்வகட்சி மாநாடு ஒன்றில் அதைச் சமர்ப்பித்து தீர்வு ஒன்றைக் காணவே அந்த அடிப்படையை இந்தியா தயாரித்து உதவியது.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் சுயாட்சி, தமிழ் மொழி மாநிலம் அல்லது பிராந்தியம் ஆகிய தமிழர் அபிலாஷைகளை நிறைவேற்றவும்

இலங்கை, ஐக்கியப் பட்ட நாடாக இருக்க வேண்டும் என்ற இலங்கை அரசின் எண்ணத்தை நிறைவேற்றவும் அந்த அடிப்படை உதவி செய்து இருக்கும் இருதரப்பினரும் நல்லெண்ணத்துடன் செயல்பட்டு இருந்தால்.

ஆனால் திரு ஜெயவர்த்தனா தான் கொடுத்த உறுதி மொழியில் இருந்து விலகியது. அதன் பின்னர் நடந்து கொண்ட விதம் எல்லாம் நன்றாகத் தெரிந்தவையே

### தேவையற்ற நடவடிக்கைகள்

1985 ஆகஸ்ட், செப்டம்பர் காலத்தில் ராஜீவ் — ரொமேஷ் பண்டாரி, தமிழர் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றை உருவாக்குவதற்கான தேவையற்ற நடவடிக்கையில் இறங்கினர்.

இந்த வேதனையான நிலை தற்போது நீக்கப்பட்டுவிட்டது

மீண்டும் இந்தியா, திரு ஜெயவர்த்தனவுடன் பேசியதும் பலனளிக்கவில்லை ஒன்றைச் சொன்னார்கள். இந்தியா விளக்கம் கேட்டவுடன் பின்னுக்கு இழுத்தனர்.

இலங்கை பற்றி யதார்த்தபூர்வமான முறையில் தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள வேண்டிய காலம் இந்தியாவுக்கு வந்துவிட்டது

தமிழருக்கு ஆதரவு கொடுப்பதன் மூலம் தேசிய நலன் கருதிச் செயல்பட வேண்டிய திட்டம் ஒன்றை இந்தியா தயாரிக்க வேண்டியுள்ளது இந்த விடயத்தில் இந்தியாவின் உள்நாட்டு எண்ணம் தீவிரமாக உள்ளது. இந்த விஷயத்தில் உள்நாட்டில் இந்திய அரசுக்கு தீவிர ஆதரவு உண்டு.

இக்கட்டத்தில் இந்தியா என்ன செய்யும் என்பதைச் சொல்ல உயர்மட்டக் கொள்கை வகுப்பாளர்கள் வருத்தப்படவேண்டியது இல்லை.

இலங்கை நிலைமை மிகவும் குழப்பமான நிலையை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றது.

இரு நாட்டு உறவுகள் குறித்து அடிப்படை மனிதத் தன்மை, அரசியல் நல்லெண்ணம் முதலியவற்றுக்கு இலங்கை மதிப்பளிக்க மறுத்தால் இந்தியாவின் வெறுப்பு விரகதியினால் ஏற்படும் பிரதிபலன்களைச் சந்திக்க தயாராக இருக்க வேண்டும் ✱

# அழகை மெருகூட்ட ரூபா 20 ஆயிரம் தேவை

பெண்ணின் அழகை மெருகூட்டும் உறுப்புக்களில் மார்பகம் முக்கிய இடத்தை வகிக்கிறது.

பெண்களுக்கு உருண்டு திரண்ட மார்பகம்தான் அழகு - கவர்ச்சி. இது தளர்ந்து விட்டால் அவரின் அழகு பறிபோய் விடும்.

இதனால் கவலைப்படவோ, துயரப்படவோ தேவையில்லை. அமெரிக்காவில் செயற்கை மார்பகம் வந்துவிட்டது

இதற்காக தளர்ந்த மார்பகத்தில் சிறு அறுவை செய்கிறார்கள் இலேசாக அறுத்துக்கொண்டு "சிலிக்கான் ஜெல்லி" என்ற மென்மையான ஒரு பொருளை உருட்டி திரட்டி மார்பகத்துக்குள் வைத்துத் தைத்து விடுகிறார்கள்.

இந்தச் சிகிச்சையின் பின்னர் அவளின் அழகு பளிச்சென இருக்கும். கன்னிப் பெண் போல் அவள் காணப்படுவாள்.

ஆனால் இதில் சிறு பிரச்சினை இருக்கிறது. அதற்குப் பணம் வேண்டும்

ஆம் இந்த சிகிச்சையை செய்துகொள்ள ரூபா. இருபதினாயிரம் தேவை.

## வாழ்நாள் குறையும் ரகசியம்

திருமணம் செய்யாது தனித்து வாழும் ஆண்களின் வாழ்நாள் 9 ஆண்டு குறைகிறது.

தனித்து வாழும் பெண்களின் வாழ்நாள் 4 ஆண்டு குறைகிறது.

குண்டாக இருப்பதும், அளவுக்கு மிஞ்சி மருந்து, மாத்திரை சாப்பிடுவதும் வாழ்நாளைக் குறைக்கும். இப்படி மேல் நாட்டு புள்ளிவிவரம் ஒன்று தெரிவிக்கிறது

**பஞ்சாமிர்தம்**

## போலி வென்றது

ஒரு முறை சார்லி சாப்ளின் போல் தத்ரூபமாக வேடமிட்டு இயல்பாக நடிப்பவர்களுக்கு பரிசுகள் அறிவிக்கப்பட்டன.

அந்தப் போட்டியில் சார்ளி-ாப்ளினே கலந்து கொண்டார்.

ஆனால் அவருக்குக் கிடைத்ததோ இரண்டாவது பரிசுதான்.

## குசேலர்

ஐக்கிய அரபுக் குடியரசில் வாழும் 43 வயதுக்காரரான முபாரக் என்பவருக்கு 4 மனைவிகள். 32 குழந்தைகள்.

நான் நன்றாக வாழுகிறேன் என்கிறார்.

அவருக்கு ஒரு பேராசை. தான் 50 குழந்தைகளுக்குத் தந்தையாக வேண்டும் என்பது தான் அது.

# வயதிற்கு மூத்தவர் வயிற்றிற்கு மூத்தவர்

இரட்டைக் குழந்தைகள் பிறந்தால் முதலில் பிறக்கும் குழந்தையையே நாம் மூத்த குழந்தை என்கிறோம்.

மருத்துவர்கள் இதை மறுக்கிறார்கள். கருவில் சூல் உண்டாகும்போது முதலில் உண்டாகும் குழந்தையே பிறக்கும் போது இறுதியாகப் பிறக்கிறது என்கிறார்கள்.

எனவே கருவில் இறுதியாக உருவாகும் குழந்தையே முதலில் பிறக்கிறது.

ஆகவே இரட்டையர்களில் ஒருவர் வயதிற்கு மூத்தவராயும், மற்றவர் வயிற்றிற்கு மூத்தவராயும் இருப்பார்கள். (உ - 5)

## பண்டிதரும் லாண்டரிக்காரரும்

பண்டிதர்களை லாண்டரிக்காரருக்கு ஒப்பிடுவார்கள் லாண்டரிக்காரரிடம் விலை உயர்ந்த துணிமணி ஏராளமாக இருக்கும் ஆனால் அவருக்கு அவை சொந்தமல்ல

அதுபோல பண்டிதரிடம் உள்ள அறிவு அவர் சொந்த அறிவு அல்ல. பலர் எழுதியதைப் படித்து அறிந்திருப்பார்கள். வேண்டும்போது அவிழ்த்து விடுவார்கள் அவ்வளவுதான்.

## நகருக்குள் நகரும் சாலை

நகரத்து கடைகளுக்கு செல்ல நீங்கள் நடக்க வேண்டியதில்லை. வீதியே நகர்ந்து சென்று நீங்கள் சேரவேண்டிய இடத்தில் உங்களைச் சேர்க்கும்.

இந்த அதிசயசாலை அமெரிக்காவில் மியாமி நாரில் அமைக்கப்பட்டு இருக்கிறது.

இப்பாதையின் வழியில் விமான நிலையமும், ஹோட்டல்களும் உள்ளன.

நகரும் பாதைகள் பல விமான நிலையங்களிலும், சுப்பர் மார்கட்டுகளிலும் உள்ளன.

# மக்கள் பணிக்கு தம்மை அர்ப்பணித்த---

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ஆடிமாதம் 'சற்றடே ரிவியூ' வாரப் பத்திரிகை வழக்குப் பற்றி கொழும்பு சென்ற ஐயா அவர்கள் சென்ற பணி ஏதோ. செய்து முடித்த பணி ஏதோ.

ஏறக்குறைய இருபதாயிரம் அகதிகள் கொழும்பு இந்துக்கல்லூரி, பிள்ளையார் கோயில், கதிரேசன் மண்டபவளவு, இராமநாதன் மகளிர் கல்லூரி ஆகிய இடங்கள் எல்லாம் கோடீஸ்வரர்களாக இருந்தவர்களும் அன்றாட வயிறு கழுவ பிச்சைச் சம்பளத்தை நம்பியிருப்பவர்களும் வந்து தங்கள் துயரங்களைப் பரிமாறிக் கொண்டிருந்தார்கள் அவர்கள் மலையகத்திலும் வடக்கு-கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களிலும் தொழில் புரிந்தவர்கள்

இவர்கள் யாவரையும் இன மத பேதமின்றி ஏற்றுத் துயர் துடைக்க ஒரு சீவன் எளிய தோற்றத்துடன் சில தொண்டர்களின் உதவியுடன் ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தது. அது வேறு யாருமல்ல விசுவலிங்க ஐயாவே தான். அந்த வயதிலும் இரவு பகல் என்று பாராது முகாம்களை ஒழுங்குபடுத்தி உணவு, உடையளிக்கவும் அவர்கள் விரும்பிய இடங்களுக்குச் செல்வதற்கு போக்குவரவு வசதிகளை ஏற்படுத்தவும் உழைத்த வண்ணம் இருந்தார். அவர் கட்டளை மீறுவார் ஒருவருமிலர். இப்பணிகளைச் செய்து முடிப்பதற்கும் எத்தனையோ இடர்கள். தாழ்வுற்ற உள்ளங்களையும் திருப்திப்படுத்த வேண்டும். முடியக்கூடிய காரியமா?

ஐயா அவர்களினால் முடிந்தது. ஐயா அவர்கள் அக் காலங்களில் அகதிகளுக்கென வழங்கப்பட்ட ஓலைப் படுக்கையில் நிலத்தில் படுத்துறங்குவார். தினமும் இரவு 12 மணிக்கே சயனம காலை 4.30மணியளவில் எழுந்து தொண்டர்களை வேலைகளுக்கு இயக்குவார். தானும் இயங்குவார். இது இறைவன் பணி! இறைவன் பணி! என்று அடிக்கடி சொல்லித் தொண்டர்களை ஊக்குவிப்பார் அவர் விரும்பிப் படிக்கும் புராணங்களில் ஒன்றாகிய பெரியபுராணம் போற்றும் பணிகள் யாவும் உள்ளடக்கிய பணியாக அடியார்க்கும் அடியேன் என்ற நிலையில் அவரது பணி அமைந்திருந்தது.

இங்ஙனம் பெரும்பணி புரிந்து பேரானந்தம் கொண்ட ஐயா அவர்கள் இறைவனடி நோக்கிச் செல்கின்றேன் என்றுணர்ந்தார் போலும். தனது நண்பர்கள் பலரிடம் விடை பெறும் பொருட்டு சோதியுள் கலப்பதற்கு முன் சில நாட்களாக அவர்கள் வீடுகள் தேடிச் சென்றிருந்தாராம் என்னிடம் வந்தது வைகாசித் திங்கள் 30 ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை மலர் கொய்து கொண்டிருந்தேன். இவர் ஏன் வந்தாரென்று யான் உணரவில்லை. உணர்ந்திருந்தால் கையில் இருந்த மலர்களை அவரது திருவடிகளிற் சூடி வணங்கியிருப்பேன். இறைவன் அந்த உணர்வை எனக்குத் தரவில்லையே? அவர் நாமம் என்றென்றும் நிலைக்க புனர் வாழ்வு பெற்ற மக்களை உள்ளடக்கிய கிராமங்கள் விசுவலிங்க புரங்களாக விரிந்து மலரட்டும்! இன்றும் தொடர்ந்து அகதிகளாக வரும் சீவன்களுக்கு இக் கிராமங்கள் அபயம் அளிக்கட்டும்! இந்த மலர்ச்சிக்குப் பங்களிப்புகள் தேவை. எமது பங்களிப்புகளே அந்த அணையாச் சமூக சோதிக்கு நாம் செய்யும் அரிய பூசைகளாகும்! ✱

# சொற்சிலம்பம்

## போட்டி இல. 22

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | | X | 5 |
| 6 | | | X | | X | 7 | |
| | X | X | 8 | | | | X |
| 9 | 10 | | | X | X | 11 | 12 |
| 13 | | X | 14 | 15 | 16 | X | |
| | X | 17 | | | | X | |
| X | 18 | | | X | 19 | 20 | X |
| 21 | | | X | 22 | | | |

**இடமிருந்து வலம்**

1. இதிகாசங்களுள் ஒன்று
6. பாடல்
7. தச்சுவேலைக்கு அவசியமானது
8. வரிசை
9. வட்டத்தின் மூலை
11. சிரார்த்தம்
13. வாழ்
14. இதற்கு ஆசை, போட்டி
17. மங்கள நிகழ்ச்சிகளில் கொடுக்கும் நொறுக்குத் தீனி 'ம்' இழந்து நிற்கிறது
18 வியாபாரம் செய்வதே இதை வேண்டித்தான்
19 நிலம்
21. தகுதியானது
22. சந்திரன்

**மேலிருந்து கீழ்**

1. மேன்மை
2. ஒன்றை எடுத்துச் செல்வது
3. வழி
4. மரத்தை நிலை நிறுத்தி வைப்பது
5. சரஸ்வதி
7. வேள்வித் தீயில் இடப்படுவது
8. மன்றம்
10. உணவில் இருக்க வேண்டியது
12. மேடு
14. வலிமை
15. பொருத்தமற்றது
16. நோன்பு
17. நெப்போலியனுக்கு இது தெரியாதாம்
18. சிரிப்பு
20. சாப்பிடும் போது சிலவேளைகளில் இது ஏறும், ஆனால் இங்கு புரண்டு கிடக்கிறது

அனுப்புவோர் பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................

ஒப்பம்: ..............................

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் 'சொற்சிலம்பம்' குறுக்கெழுத்துப் போட்டியில் கலந்து கொள்ளலாம்
2. ஒருவர் எத்தனை கூப்பன்களும் நிரப்பி அனுப்பலாம்.
3. 'சஞ்சீவி'யில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேருக்கு முறையே 50, 25, 15 ரூபா பரிசில்கள் வழங்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் 'சொற்சிலம்பம்' போட்டி இல. 22. சஞ்சீவி, தபால் பெட்டி இல. 23, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அடுத்துவரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.
7. உதயன் பப்ளிகேசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட், நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களும் அவர்களது உறவினர்களும் இந்தப் போட்டியில் பங்குபற்ற முடியாது

✱ சொற்சிலம்பம் போட்டிகளில் பங்குபற்றும் வாசகர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது பல சமயங்களில் மூன்றுக்கும் அதிகமான வாசகர்களும் சரியான விடையை அனுப்புகிறார்கள். அப்படியான சந்தர்ப்பங்களில் சரியான விடை எழுதுவோரிலிருந்து அதிஷ்ட சீட்டு மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதை வாசகர்களின் கவனத்துக்கு அறியத்தருகிறோம்.

### வெற்றி பெற்றவர்கள் விவரம்

சொற்சிலம்பம் இல 20

முதலாம் பரிசு; செல்வி பா. பாலசிங்கம் 62/8, பிள்ளையார் கோயில் ஒழுங்கை, நல்லூர்.

இரண்டாம் பரிசு: செல்வி மாதுரி மே/பா, டாக்டர் தே. பாலசுப்பிரமணியம் இணுவில் மேற்கு.

மூன்றும் பரிசு; செ. செல்வநேசன், சண்டிலிப்பாய்.

✱ பரிசுக்குரிய பணத்தைப் பெறுவதற்கு, கடிதம் கிடைத்த பின்னர் பரிசு பெற்றவரே உரிய அடையாள அத்தாட்சிகளுடன் நேரில் வர வேண்டும்.

பின்வரும் இரண்டு விடைகளுக்குமுரிய வினாக்களில் மயக்க நிலை காணப்பட்டதால் இரண்டுக்கும் இரண்டு விடைகள் சரியெனக் கொள்ளப்பட்டது. இடமிருந்து வலம்:

5. (அ) பாரி (ஆ) ஓரி

18. (அ) தாளம்பூ (ஆ) தாழம்பூ

**சொற்சிலம்பம் இல. 20 விடைகள்**

**மேலிருந்து கீழ்**

1. சந்திரன் 2. பணம்
3. தகுர 4. பரிதாபம்
7. கவி 8. பரிசயம்
10. சுகந்தம்
11. சுகிமன் 12. துணை
13. அரவு 14. சிப
15. சோவ
16. வைபூ.

**இடமிருந்து வலம்:**

1. சம்பந்தம்
6. திகம்பரம் 9. ரவி
10. சுப 11. சுகதுக்கம்
13. அரியணை
14. சிரமம்
15 சோதனை
17. பவுன்

# பல நிலையிலும்---

(6ம் பக்கத் தொடர்ச்சி)

அவசியமாகும் பெருந்தொகையில் பார்வையாளர்கள் அங்கும் இங்கும் அலையும்போது நோயாளருக்கு எங்கே அமைதி கிடைக்கும்?

எனவே, பார்வையாளர்கள் மிகவும் குறைந்த தொகையினரே வைத்தியசாலைக்கு வருவது விரும்பத்தக்கது. பார்வையிடும் நேரத்தில் மட்டும் வைத்தியசாலைக்கு வரவேண்டும். நோயாளருக்கோ அல்லது வைத்தியசாலை ஊழியர்களுக்கோ எவ்வித சிரமமும் ஏற்படுத்தாத வகையில் பார்வையாளர்கள் ஒழுகிக் கொள்வது அவசியம்.

### சுத்தம்

குறைந்த வசதிகளுடன் நிறைந்த சேவையை மக்களுக்கு வழங்க யாழ். போதனா வைத்தியசாலை நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. இந்த வேளையில் நோயாளர்கள், பார்வையாளர்களின் ஒத்துழைப்பு வைத்தியசாலை ஊழியர்களுக்கு அத்தியாவசியம் அல்லவா?

குப்பைத் தொட்டிகளையும் மலசல கூடங்களையும் முறையாகப் பாவித்து வைத்தியசாலையில் சுத்தம்பேண அவர்கள் உதவி செய்தல் வேண்டும்.

### இறந்த சடலங்கள்

ஒருவர் மரணமடைந்தால் சட்டரீதியான சில கருமங்கள் நடைபெறுவது அவசியம். அவை நமது கடமைகள். அதேவேளையில் அக்கருமங்களை ஆற்றுவது நமது சமுதாயத்துக்கும் நன்மை பயக்கும்.

ஒருவர் நோயுற்று காயமுற்று, நஞ்சருந்தி இறப்பின், மரண பரிசோதனை நடப்பதை சில உறவினர்கள் விரும்புவதில்லை

மரண பரிசோதனை நடைபெற்றால்தான் மரணத்தின் காரணம் தெரியவரும். மரணத்தின் காரணத்தை நிர்ணயித்த பின்னர்தான் மரணச் சான்றிதழை வழங்க முடியும் இச் சான்றிதழ் இருந்தால் தான் சொத்துமாற்றம், காணிமாற்றம் ஆகியவை சட்டபூர்வமாகும்.

மருத்துவ ரீதியாகச் சிந்திப்பின் நோயின் காரணியைக் கண்டுபிடித்தால் ஏனைய நோயாளருக்குப் பயன் ஏற்படும். மருத்துவத் துறைக்கும் அதனால் பங்களிப்பு ஏற்படுகிறது.

சில சமயங்களில் கொலைகளை நிர்ணயிக்க மரண பரிசோதனை உதவும். மரணம் கொலையா அல்லவா, கொலையாயின் எவ்வாறு எப்போது நிகழ்ந்தது? எவ்வளவு நேரத்தில் நிகழ்ந்தது, எத்தகைய ஆயுதம் மூலம் கொலை நிகழ்ந்தது? என்பன போன்ற பல தகவல்களை இம் மரண பரிசோதனைமூலம் பெறக்கூடியதாக இருக்கும் இல்லையேல் உண்மை சமுதாயத்துக்குத் தெரியாது போய்விடும். எனவே இக்கருமத்தைச் செய்ய ஒத்துழைப்புத் தேவை.

### ஊழியர் ஒத்துழைப்பு

யாழ் போதனா வைத்தியசாலை இன்று நெருக்கடியான சமயங்களிலெல்லாம் தனதுகடமைகளைச் செல்வனே ஆற்றுவதற்கு ஊழியர்களின் ஒத்துழைப்பே முக்கிய காரணம்.

நிர்வாகம் தனது பிரச்சினைகளை ஊழியர்களுக்கு எடுத்துச் சொல்கிறது ஊழியர்கள் தமது பிரச்சினைகளை நம்மிடம் கூறுகிறார்கள். இருசாராரும் மனந்திறந்து பேசுகிறோம். மனிதாபிமான உணர்வுடன் சேவை ஆற்ற வேண்டும் என்ற உறுதி நமக்குண்டு. இதனால் எமக்கிடையே நல்லுறவும் ஒத்துழைப்பும் நிலவுகிறது.

ஊழியர்கள் நெருக்கடியான கால வேளைகளிலும் கடமை தவறாது வேலைக்கு வருகிறார்கள். யாழ் நகரம் முழுமையாக வெறிச்சோடிய நிலையிலும் இங்கு அவர்கள் சேவை செய்கின்றனர். அவர்களை சஞ்சீவி மூலம் பாராட்டுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

**பேட்டி கண்டவர்: அபிராமி**

# இந்தியாவின்---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படைத் தளமும் கட்டுநாயக்கா விமானத் தளமும் பிரித்தானியாவின் கையிலிருப்பது இந்தியாவின் பாதுகாப்புக்குச் சவால் என்று இந்தியா கருதியது இந்தியாவின் மூன்று பக்கங்களின் பாதுகாப்புடன் இலங்கை சம்மந்தப்பட்டுள்ளது என்பதை நாம் உணரவேண்டும்.

### பண்டாரநாயக்காவின் சாணக்கியம்

இந்திய நாட்டில் இவ்வாறான கருத்து நிலைப்பாடு வலுவடைவதையும், அதனால் இலங்கை அப்போது எதிர்நோக்கிய ஆபத்தையும் நன்குணர்ந்தார் அப்போதைய பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டீ. பண்டாரநாயக்கா

இதனால், திருகோணமலை கடற்படைத் தளத்தையும். கட்டுநாயக்கா விமானத்தளத்தையும் பிரித்தானியாவிடம் இருந்து பொறுப்பேற்ற பண்டாரநாயக்க, இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை இந்தியா கடைப்பிடிக்கும் அணிசேராக் கொள்கை என்றும் பிரகடனப்படுத்தினார். இதன் பயனாக உருவான அரசியல் நெருக்கடிச் சூழ்நிலை ஒருவாறு தளர்ந்தது.

### இந்தியாவுக்கு புதிய அச்சுறுத்தல்

1984இல் மீண்டும் இவ்வாறான சூழ்நிலை ஒன்று உருவானது இலங்கை அரசின் வெளிநாட்டுக் கொள்கை, பொருளாதாரக் கொள்கையினால் இந்தியாவின் பாதிப்பு, இந்தியாவில் உறுதியான தலைமைத்துவம். இலங்கையில் ஏற்பட்ட கலவரம், தமிழ் அகதிகள் இந்தியா சென்றமை இலங்கை மக்களின் பிரதிநிதிகள் என்று சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப் பட்ட, தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இந்தியாவில் தஞ்சம் அடைந்தமை, தென்னிந்திய மக்களின் செல்வாக்கு 1985 இன் முற்பகுதியில் நடைபெற இருந்த பொதுத் தேர்தல் ஆகியவை காரணமாக இந்தியா இலங்கை மீது படையெடுக்கும் சூழ்நிலை கனிவடைந்தது ஆனால் இந்திராவின் மரணத்தினால் இந்த நிலைமை மாறியது

### அமெரிக்கா விளையாடுகிறது

இலங்கை இனப்பிரச்சினையில் அமெரிக்க வல்லரசு நேரடியாக இந்தியாவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளபோதிலும் மறைமுகமாக இலங்கை அரசின் 'இராணுவத் தீர்வு'க்கு உதவி அளிக்கிறது எனினும், இந்திய ராஜரீக உறவுக்கு அமெரிக்கா கட்டுப்பட்டாக வேண்டும்.

தேச விடுதலையின் பின்னரே; அனைத்து நாடுகளிலும் தேசிய இன சுயநிர்ணய உரிமை எழுகிறது. இந்தியாவில் அத்தகைய உணர்வு தலைதூக்கியபொழுது மொழி வழி மாநில அமைப்பு மூலம் ஒருவகை சமஷ்டியை நாடித் தீர்வு காணப்பட்டது.

பாகிஸ்தான் இத்தேசிய இனச்சுயநிர்ணய உரிமையைச் சமஷ்டி மூலம் தீர்க்கத் தவறியமை காரணமாக பங்களாதேஷ் தனிநாடாக உதிக்க வழிவகுத்தது.

இலங்கை இனப்பிரச்சினையை இலங்கை அரசு சுதந்திரம் பெற்ற காலத்தொடக்கம் நீதியாகக் கையாளத் தவறிவிட்டது. இதனால் இன்று சமஷ்டி கொடுப்பினும் அது தீர்வாக முடியாத நிலைமை உருவாகிவிட்டது. 1976 ஆம் ஆண்டில் ஒருவேளை மாகாண சபையே தீர்வாக அமைந்து இருக்கும்.

ஆனால் இன்று சமஷ்டி காலங் கடந்த தீர்வு. இந்தியாவை நாம் வென்றெடுப்போமா, இந்தியா நம்மை வென்றெடுக்குமா என்பதே கேள்வி.

## உடல் நோய்கள்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

உண்டு!

பெரும்பாலான நாடுகளில் வெள்ளைப்பூண்டின் எண்ணெய் மஞ்சள் காமாலை நோயை குணப்படுத்த பயன்படுத்தப்படுகிறது.

பல நூற்றாண்டுகளாக நாட்டு வைத்திய முறைகளில் குண்டிக்காயில் கல் ஏற்படுவது, வாதம், முதலிய நோய்களைத் தீர்க்க வெள்ளைப்பூடு பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. ★

(ஆதாரம்- ஸ்புட்னிக்)

## குடல் புண்---

(6ம் பக்கத் தொடர்ச்சி)

நோயால் பாதிக்கப்படுகின்றனர்.

இந்நோயுடையவர்கள் கோப்பி, தேனீர் புகையிலை, காரம், மதுபானம் எண்ணெய்ப் பதார்த்தங்களை அறவே நீக்கவேண்டும் பால் அதிகம் பருக வேண்டும். சீரணிக்கக் கூடிய உணவுவகைகளை உண்ணவேண்டும். பசியுள்ள நேரங்களில் கட்டாயமாக உண்ணவேண்டும். இவற்றைக் கவனித்தால் நோய் குறைய வாய்ப்புண்டு.

இதற்கு ஹோமியோபதி சிகிச்சை முறை அதிக பயன் தரவல்லது. அவரவர் நோய்க் குறிகளுக்கு ஏற்றவாறு அளிக்கப்படும் இந்தச் சிகிச்சை குடற் புண்களைப் படிப்படியாகக் குணப்படுத்த வல்ல தாகும் ✱

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மில்க்வைற் செய்தி இதழ் — 127
திருப்திகரமான சம்பூரண சலவைக்கு நுரைவளம் கூடிய
மில்க்வைற் நீல சோப்பை
வாங்கி உபயோகியுங்கள். 10 மேலுறைகளில் உள்ள திருக்குறளை வெட்டி அனுப்பி மேற்படி புதிய செய்தியைப் பெற்றுக்கொள்ளுங்கள்
"மில்க்வைற்". த.பெ. எண்: 77,
யாழ்ப்பாணம்.

சஞ்சீவி
28 - 06 . 1986 சனிக்கிழமை

MILKWHITE BAR SOAP
சின்ன சலவைக்கு நுரைவளம் கூடிய மில்க்வைற் பார் சோப்பை வாங்கி உபயோகியுங்கள்.
பெரிய பார் சோப் ரூ 12-00, சிறிய பார் சோப் ரூ. 6-00, மினி பார் சோப் ரூ. 2-50
"மில்க்வைற்" — யாழ்ப்பாணம்.

# தமிழர் ஏற்கும் தீர்வு: அதைக்காண இன்னும் எத்தனை காலம் போகும்?

இனப்பிரச்சினைக்கான பேச்சுக்களை எந்த மட்டத்தில் இருந்து தொடங்குவது?

சுமார் 30 மாதங்களுக்கு மேல் இதற்காகத் தலைவர்கள் மண்டையைப் போட்டு உடைத்தார்கள்.

கடைசியாக எந்த மட்டத்தில் இருந்து தொடங்குவது என்பதைக் கண்டு பிடித்து விட்டார்கள்.

அப்பாடா! இப்பொழுது தான் இலங்கை அரசு கண்டு பிடித்தனது 'மாகாண சபை' மட்டத்தில் இருந்து தொடங்குவோம் என்று.

இதைத்தான் 1983 இறுதியில் இந்திய ராஜதந்திரி பார்த்தசாரதி இணைப்பு- சி என்ற பெயரில் திரு. ஜெயவர்த்தனாவுக்குக் கொடுத்தார்.

இதை அடிப்படையாக வைத்துப் பேசுங்கள் என்று அன்னை இந்திரா சொன்னார்.

ஆம் என்று சொல்லி வந்தவர் அதை 'அனாதை' ஆக்கினார்.

இணைப்பு- சி என்ன சொன்னது?

மாகாணசபை மட்டத்தில் இருந்து பேச்சுக்களை நடத்தி தமிழர் அபிலாஷைகளை நிறைவேற்ற வழி காணுங்கள்.

இப்படித்தான் இணைப்பு- சி கூறியது.

## 1984 இல்

ஆனால் 1984 சர்வகட்சி மாநாடு 'மாகாணத்'தைக் கைவிட்டு 'மாவட்டத்'தை மீண்டும் பிடித்துக் கொண்டது.

வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய கதையானது.

ராஜீவின் ஆட்சியில் மீண்டும் பேச்சுக்களைத் தொடங்குவதற்கான அடிப்படைத் திட்டம் ஒன்றைத் தயாரிக்க இந்திய ராஜதந்திரிகள் முயற்சித்தனர்.

இலங்கை அரசை பண்டாரி மூலம் நயமாகக் கேட்டுப் பார்த்தனர்.

'உனக்கும் பெப்பே உன் அப்பனுக்கும் பெப்பே'— என்ற தோரணையில் இலங்கை நடந்து கொண்டது

அடிக்கு மேல் அடி அடித்தால்தான் அம்மியும் நகரும்.

அது போன்று குண்டுக்கு மேல் குண்டு வெடித்தால் தான் இலங்கை அரசும் நகருமோ! என்னவோ!!

பின்னர் இடம்பெற்ற ராஜதந்திர நெருக்குதல்கள் காரணமாக இப்

**உள்ளும் புறமும்** — குறுமுனி

போது புதிய யோசனைகளை இலங்கை அரசு சமர்ப்பித்துள்ளது.

யோசனைகளில் காணப்பட்ட இடைவெளிகளை நிரப்பக்கூட இந்தியா நெருக்க வேண்டியதாயிற்று.

## புதிதாக ஒன்றுமில்லை

இப்போது எந்த மட்டத்தில் இருந்து பேச்சுக்களைத் தொடங்குவது என்பதற்கான இலக்கு ஒன்றைக் கண்டாயிற்று.

இதுதான் இந்தியாவின் நிலை.

1984 சர்வகட்சி மாநாட்டில் அடிப்படைத் திட்டம் ஒன்றுமில்லாமல் தமிழர் தரப்பினரை 'பேய்க்காட்டி' வந்த நிலைமை தற்சமயம் நீங்கிவிட்டது

இந்தியாவின் வற்புறுத்தலினால் 'இணைப்பு -சி' போன்ற ஒன்றுதான் இப்போதும் உருவாக்கப்பட்டுள்ளது

வேறு புதிதாக ஒன்றும் படைக்கப்படவில்லை.

இலங்கை சமர்ப்பித்துள்ள புதிய யோசனைகள் ஆக்கபூர்வமான பேச்சுக்களுக்கு வழி வகுத்துள்ளதே தவிர, தீர்வைக் கண்டுவிடவில்லை.

இதுவரை 'அலம்பல்' பேச்சுக்களை நடத்திய இலங்கை அரசும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் இனி ஆக்கபூர்வமான பேச்சுக்களில் ஈடுபடலாம். கூட்டணித் தலைவர்கள் இலங்கை அரசுக் குழுவுடன் நேரடியாகப் பேசும் சந்தர்ப்பம் ஏற்பட்டால்கூட இனி 'அலம்பல்' பேச்சுக்களில் ஈடுபடாமல் 'வெட்டு ஒன்று துண்டு இரண்டு' என்ற ரீதியில் பேசும் வாய்ப்பு ஒன்றை இந்தியா தற்சமயம் உருவாக்கிக் கொடுத்துள்ளது.

## இன்னும் எத்தனை சோதனைகளோ?

இலங்கையின் புதிய யோசனைகளை தமிழர் குழுக்களிடம் ஒப்படைக்கும் கட்டம் வந்துவிட்டது. இனித் தமிழர் குழுக்கள் அவற்றைப் பரிசீலனை செய்யலாம்—

இந்தியாவின் வெளியுறவு அதிகாரி ஒருவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தமிழர் குழுக்களிடம் ஒப்படைக்கக்கூடிய 'தகுதி'யான யோசனையை இலங்கையிடம் இருந்து பெறவே இந்தியா இவ்வளவு கஷ்டப்பட்டது என்றால், இந்த யோசனைகளை அடிப்படையாக வைத்து தமிழர் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வைக் கண்டுபிடிக்க இன்னும் எத்தனை வேதனைகள், சோதனைகள் ஏற்படுமோ? பேச்சுக்கள் என்ற பெயரில் இதுவரை நடந்து வந்த 'அலம்பல்' காலம் போய் 'ஆக்க'பூர்வமான 'இறுதி'க் கட்டத்துக்கு வந்துவிட்டது இனப் பிரச்சினை. இப்படி அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

# யாழ்நகரில் புதனன்று பூரண கடையடைப்பு

## வர்த்தகர் சங்கம் முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ் நகரில் எதிர்வரும் புதன்கிழமை பூரண கடையடைப்பு நடத்துவது என யாழ் வர்த்தகர் சங்கம் முடிவு செய்திருக்கிறது.

திரு எஸ். ?. முருகேசுவின் ஸ்தாபனத்திற்கு லொறி மூலம் கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்ட பொதுமக்களின் பாவனைப் பொருள்கள் கடந்த 2 ஆம் திகதி சூறையாடப்பட்டதை ஆட்சேபித்தே இந்தக் கடையடைப்பு.

இதேவேளை கடையடைப்புத் தினமான புதனன்று சகல வர்த்தகர்களையும் கூட்டி இத்தகைய செயல்களுக்கு எதிராக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி முடிவெடுப்பது என்றும் வர்த்தகர் சங்கம் முடிவு செய்திருக்கிறது (உ)

# 40 லொறிகள் ஆனையிறவில் வைத்து திருப்பப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூன் 28

கிளிநொச்சி வீதி வழியாக வராத சுமார் 40 லொறிகள் ஆனையிறவுத் தடை முகாமில் வைத்து திருப்பி அனுப்பி வைக்கப்பட்டன.

கிளிநொச்சி சென்று ஆயுதப்படை முகாமில் கடிதம் பெற்று வருமாறு லொறிச் சாரதிகளுக்கு ஆனையிறவு தடைமுகாமில் கூறப்பட்டது (உ-எ-6)

# அரச ஊழியர் கப்பலில் திருமலைக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 28

திரும்பிச் செல்ல முடியாது யாழ் மாவட்டத்தில் தங்கியுள்ள திருகோணமலையில் பணிபுரியும் அரச, கூட்டுத்தாபன ஊழியர்கள் ஜூலை முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை கப்பலில் திருமலை செல்வர்.

இதற்கான ஒழுங்குகளை யாழ் அரச அதிபர் திரு. வி. எம். பஞ்சலிங்கம் செய்திருக்கிறார்.

பஸ்களில் பாதுகாப்பாக திருமலை போக முடியாதுள்ள நிலையில் அரச ஊழியர்கள் அரச அதிபருக்கு முறையிட்டதை யடுத்தே இந்த ஏற்பாடு.

கப்பல் ஒன்று காங்கேசன்துறை துறைமுகத்தில் இருந்து செவ்வாய்க்கிழமை (1-7-86) பிற்பகல் 12 30 மணிக்குப் புறப்படும்.

அதில் செல்ல விரும்பும் திருமலை ஊழியர்கள் 30-6-86 காலை 10 மணிக்கு முன்னர் செயலக நிர்வாக அதிகாரி திரு பாலரத்தினத்திடம் தங்களின் பெயர், பதவி, யாழ் முகவரி, அடையாள அட்டை இலக்கம், பணிபுரியும் திணைக்களம் பற்றிய விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று அரச அதிபர் கேட்டுள்ளார்.

(உ-எ-5)

நிக்கராகுவா

# கிளர்ச்சிக்காரருக்கு அமெரிக்க ஆயுத உதவி

## அரச பயங்கரவாதத்துக்கு ஊக்கம்

நிக்கரகுவா அரசாங்கத்துக்கு எதிராகப் போராடும் கிளர்ச்சிக்காரர்களுக்கு 10 கோடி டாலர் பெறுமதியான இராணுவ உதவிகளை அமெரிக்கா வழங்க உள்ளது.

இதுதொடர்பான தீர்மானம் அமெரிக்க கீழ்ச்சபையான காங்கிரஸில் நீண்ட இழுபறிக்குப்பின்னர் ஆகக் குறைந்த பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேறி இருக்கிறது.

ஆதரவாக 221 வாக்குகள் கிடைத்தன எதிராக 209 வாக்குகள் கிடைத்தன

எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியின் ஆதிக்கத்தின்கீழ் உள்ள காங்கிரஸ் இதே தீர்மானத்தை மூன்று மாதங்களுக்கு முன்னர் நிராகரித்திருந்தது.

தீர்மானம் நிறைவேறுவதை மீண்டும் தடுக்க ஜனநாயகக் கட்சி மேற்கொண்ட கடைசிநேர முயற்சிகள் கைகூடவில்லை.

தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்படுவதற்கு முன்னர் காங்கிரஸில் உரை நிகழ்த்துவதற்கு சபாநாயகரின் அனுமதியை அதிபர் றேகன் கோரி இருந்தார்.

இந்த அனுமதியைக் கூட ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த சபாநாயகர் தோமஸ் ஓ நீல் நிராகரித்திருந்தார்

இத்தனை எதிர்ப்புகளுக்கு மத்தியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

மேல் சபையான செனட்டில் அதிபர் றேகனின் குடியரசுக் கட்சியே பெரும்பான்மை அங்கத்தவர்களைக் கொண்டிருப்பதால் தீர்மானம் அங்கீகாரம் பெறுவதில் இனி எதுவித தடையும் இருக்கமுடியாது.

ஒரு சட்ட பூர்வமான அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காகப் போராடும் கிளர்ச்சிக்காரர்களுக்கு அமெரிக்க மத்திய புலனாய்வு நிறுவனம் மூலம் இந்த 10 கோடி டாலர் பெறுமதியான ஆயுத உதவியும் வழங்கப்பட இருக்கிறது.

அதிபர் றேகனின் இந்த நடவடிக்கை சர்வதேச அரங்கில் அமெரிக்க— சோவியத் கெடுபிடி யுத்தத்தை மேலும் அதிகரிக்க வழிகோலும் என்று அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

வியட்நாம் யுத்தத்தில் அமெரிக்கா படித்த பாடத்தை பெரும்பாலான அமெரிக்க மக்கள் இன்னும் மறக்கவில்லை என்பதை அதிபர் றேகனின் நடவடிக்கைக்கு அமெரிக்க மக்களிடம் இருந்து தெரிவிக்கப்படும் எதிர்ப்பு தெளிவாகக் காட்டுகிறது

மத்திய அமெரிக்காவில் கம்யூனிஸம் பரவுவதைத் தடுப்பதே தமது நடவடிக்கையின் நோக்கம் என்று அதிபர் றேகன் இதற்கு நியாயம் கற்பிக்க முயல்கிறார்

அதிபர் றேகனின் இந்த நடவடிக்கைக்கு எதிராக நிக்கரகுவாவின் இடதுசாரி சாடினிஸ்ட் அரசாங்கம் நிச்சயமாக ரஷ்யாவின் உதவியைப் பெறும் என்பதில் சந்தேகமில்லை.

நிக்கரகுவா ஜனாதிபதி ஓடேகோ றேகனை 'பயங்கரவாதி'', ''ஹிட்லரிசவாதிக'' என்று வர்ணித்துள்ளார்

நிக்கரகுவா ஒரு ''புற்றுநோய்'' அதனை முளையிலேயே கிள்ளி எறியவேண்டும். இதில் தவறினால் எதிர்காலம் தம்மேல் பழி போடும் என்கிறார் றேகன்.

கியூபாவில் விட்ட பிழையை நிக்கரகுவாவில் விடப்போவதில்லை என்றும் அவர் தெரிவிக்கிறார்.

எது எப்படி இருந்தாலும் சட்டபூர்வ அரசாங்கம் ஒன்றை கவிழ்பதற்கு அரசு ஒன்று பகிரங்கமாக ஆயுதஉதவி அளிப்பது ஒரு அரச பயங்கரவாதமே.

றேகனின் நடவடிக்கை சர்வதேசஅரங்கில் அமெரிக்காவுக்கு இருந்துவரும் மதிப்பை மேலும் குறைக்கவே வழி கோலும்

**உலக உலா** — என்.பி.சீலன்

# புதிய யோசனைகளை இந்தியா எப்படி பரிசீலிக்கும்?

## புதுடில்லி விளக்கம்

புதுடில்லி, ஜூன் 27

இலங்கையின் புதிய யோசனைகள் இலங்கையில் நடைபெறும் சம்பவங்களை அடிப்படையாக வைத்தே பரிசீலனை செய்யப்படும்.

இப்படி இந்திய அரசு, இலங்கை அரசாங்கத்துக்கு அறிவித்துவிட்டது.

இவ்வாறு புதுடில்லி அரசு வட்டாரங்கள் தெரிவித்தன

இனப்பிரச்சினை சம்பந்தமான பேச்சுக்களைத் தொடருவதற்கு ஓர் அடிப்படையாகத் தான் இலங்கையின் புது யோசனைகளை இந்தியா எடுத்துக்கொண்டுள்ளது.

ஆதலால் தான் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களை புதுடில்லிக்கு அழைத்து இலங்கையின் புதிய யோசனைகளைக் கையளிக்க இந்திய அரசு தீர்மானித்தது.

இந்திய அரசு வட்டாரங்களை ஆதாரம் காட்டி 'இந்து' இப்படி செய்தி வெளியிட்டுள்ளது.

## அ' புரத்துக்கு பஸ் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 28

கொழும்பு செல்லும் ரயிலைப் பிடிக்கக் கூடியதாக நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் தினமும் காலை 6 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து அனுராதபுரத்திற்கு இ போ ச பஸ் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

சனநெருக்கடியை முன்னிட்டு ஞாயிறு திங்கட்கிழமைகளில் கோண்டாவில் டிப்போவிலிருந்து காலை 5 30 மணிக்கு மற்றொரு பஸ் சேவை அனுராதபுரத்திற்கு நடைபெறும்.

இந்த பஸ் கொழும்பில் இருந்து அனுராதபுரம் ஊடாக வரும் பயணிகளை அனுராதபுரத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு ஏற்றிவரும் (உ)

## சீநோர் ஊழியர் நிவாரண நிதி

யாழ்ப்பாணம், ஜூன் 28

மண்டைதீவில் உயிரிழந்த ஏழை மீனவர்களின் குடும்பங்களுக்காக சீ-நோர் அபிவிருத்தி நிறுவன ஊழியர்களினால் 7,375 ரூபா வசூலிக்கப்பட்டது.

சீநோர் பொதுமுகாமையாளர் திரு ஞா. யுகேந்திரன் குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்திடம் இதனைக் கையளித்தார். (இ)

## கூட்டணி. ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கையளிக்கப்பட்டன.

பின்னர் கூட்டணித் தலைவர்கள் வெளிவிவகார ஆலோசனைக் குழுத் தலைவர் திரு ஜி பார்த்தசாரதியைச் சந்தித்து புதிய யோசனைகள் பற்றி ஆராய்ந்தனர்,

கூட்டணிக் குழுவில் திரு அ. அமிர்தலிங்கம், திரு மு சிவசிதம்பரம், திரு இரா. சம்பந்தன் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

புதிய யோசனைகளுடன் குழு, புதுடில்லியில் இருந்து நேற்றே சென்னை திரும்பியது.

(உ-எ)

## ஆறுபோர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தீவிரவாதிகளின் கடல் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதே கப்பல்கள் அனுப்பப்பட்டதன் நோக்கம் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

(உ-எ-6)

## படுகாயம்

அம்பாறை மாவட்டத்தில் ஆயுதப்படையினர் சென்ற வாகனம் ஒன்று மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் 7 சிப்பாய்கள் படுகாயம் அடைந்தனர்.

விமானம் மூலம் அவர்கள் அனைவரும் கொழும்பு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். (உ-21)

## சிங்கள பீடத்திற்கு மூடுவிழா!

கொழும்பு, ஜூன் 28

1916 ஆம் ஆண்டு முதல் லண்டன் பல்கலைக்கழகத்தில் இயங்கி வந்த சிங்கள மொழிப் பீடத்தை மூடுவது என பிரித்தானிய அரசு முடிவு செய்திருக்கிறது.

## புலிகள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யடுத்து சிப்பாய்கள் தமது முற்றுகை முயற்சியைக் கைவிட்டதாக அங்கிருந்து வந்த செய்திகள் தெரிவித்தன

சிப்பாய்கள் அப்பகுதியை விட்டு வெளியேற முயற்சித்து வருவதாகவும் அச்செய்திகள் தெரிவித்தன.

இதே வேளை தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டது -

300 க்கும் அதிகமான சிப்பாய்கள், இரண்டு பொம்மர்கள், இரண்டு ஹெலிக்கொப்டர்கள் ஆகியவற்றின் உதவியுடன் நடத்திய முற்றுகை முயற்சியின் போது பத்துக்கும் அதிகமான சிப்பாய்கள் உயிரிழந்தனர்.

கங்கா, லோகேஸ் ரவி ஆகிய மூன்று விடுதலைப் புலிகள் வீரமரணமடைந்தனர்.

(உ-21-6)

## தமிழின் அறிவு

(1ம் பக்கத்தொடர்ச்சி)

நூல்களை ஆக்கவும், வெளியிடவும் ஒரு ஸ்தாபனத்தை உருவாக்கலாம். அதன் மூலம் அன்னை தமிழுக்கும், தமிழ் சமூகத்துக்கும் சேவை செய்யலாம். அது அவர்களது கடமையுமாகும்

அவ்வாறு அறிஞர்கள் செய்யத்தவறின், அவர்கள் கற்ற கல்வியால் யாருக்கும் எதுவிதப் பயனுமிராது.

## நாணய மாற்று விவரம்

வாசகர்களின் நன்மை கருதி வெளிநாட்டு நாணயங்களுக்கு உரிய இலங்கை நாணய மதிப்பு விவரம் வாராந்தம் சஞ்சீவியில் பிரசுரமாகிறது.

(இது நேற்றைய மாற்று விகிதமாகும்)

| வெளிநாட்டு நாணயம் | இலங்கையில் (ரூபா சதத்தில்) |
|---|---|
| ஸ்ரேலிங் பவுண் | 41. 78 |
| அமெ. டாலர் | 27. 81 |
| இந்திய ரூபா | 2. 40 |
| மார்க் (ஜெர்மனி) | 12. 40 |
| கனடா டாலர் | 19. 72 |
| [illegible] | [illegible] |
| பிராங் (சுவிஸ்) | 15 11 |
| [illegible] | [illegible]. 40 |

## ஓர் முக்கிய அறிவித்தல்

தோலகட்டி தயாரிப்புகள் நகரில் தாராளமாக கிடைக்கின்றது. தட்டுப்பாடோ அல்லது கட்டுப்பாடோ கிடையாது. எது எப்படியானாலும் எமது தயாரிப்புகள் தொடர்ந்து கிடைக்கும் போலிகள்! கவனம். எமது நெல்லிரச லேபலில் ஒரு மணிக்கூட்டு கோபுரம் உண்டு. அதில் நேரம் 6 20 மணியைக் காட்டுகின்றது. ஆகவே உன்னிப்பாக கவனித்து வாங்கவும், இவ் இளவேனிற் காலத்தில் தோலகட்டி நெல்லிரசம் உங்கள் தாகத்தை நிச்சயம் பூர்த்தி செய்யும்.

ஏகப் பிரதிநிதிகள்

ஜோ. எகங்கன் செனித் மார்கட்டில் யாழ்நகர்.

செபமாலைசதார்சபை தோலகட்டி வயாவிளான்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற

**வரணி மிசன் விற்பனை நிலையம்**

145, நவீன சந்தை; யாழ்நகர்

ஜீவாகாரம்
முழுக் குடும்ப உப உணவு
4 மாதத்திற்கு மேற்பட்ட குழந்தைகள், பாலூட்டும் தாய்மார், உடல் நலம் குன்றியோர், வயோதிபர் மற்றும் ஏனையோர்க்கும் உகந்த முறையில் தயாரிக்கப்பட்டது.



Jeevakaram
ALL FAMILY
PRECOOKED SUPPLEMENTARY FOOD
Prepared under guidance of Primary Health Centre, Research Unit, General Hospital (Teaching) Jaffna.
by ANNA INDUSTRY INUVIL.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி 28—06—1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 15, Second Lane, Power House Road, JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org